பக்கங்கள்: 11

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2055 சித்திரை 27 சனிக்கிழமை 10.05.2025 கதிர் 182

## இது ரகசியம் அல்ல!

உள்ளூராட்சி சபைகளில் ஆட்சி அமைக்கும்போது தமக்கு ஆதரவு தரும் தரப்பில் தமக்கு மிக நெருக்கமான அளவில் அல்லது சமமான அளவில் ☞ 2

## சூழல்நேய களியாட்டப் பூங்கா மண்டை தீவில் நேற்று திறப்பு





மண்டைதீவில் அமைக்கப்பட்டுள்ள 'நெய்தல் சூழல்நேய பூங்கா' நேற்று வெள்ளிக்கிழமை வடக்கு மாகாண ஆளுநர் வேதநாயகனால் திறந்து வைக்கப்பட்டது. யாழ். மாவட்டச் செயலர் பிரதீபனும் நிகழ்வில் கலந்துகொண்டு பூங்காவைத் திறந்து வைத்தார்.

இந்தப் பூங்கா போன்று பல வேலைத் திட்டங்கள் எதிர்காலத்தில் இந்தப் பகுதியில் முன்னெடுக்கப்படும் என்று தான் நம்புகிறார் என்று ஆளுநர் ☞ 2

## இணைய வழியில் பல்கலை. பதிவுகள் தொடங்கின

கடந்த உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் நுஜயிஷ்ஜள ஊடாக பல்கலைக் கழகங்களுக்கு பதிவு செய்யும் நடவடிக்கை ☞ 8

### கசிப்பும் பணமும் கொடுத்து வென்றதான

## அமைச்சர் பிமலின் கருத்துக்கு சிறீதரன் எம்.பி. கடும் கண்டனம்

இலங்கை தமிழரசுக் கட்சி மக்களுக்கு கசிப்பையும் பணத்தையும் வழங்கியே உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் ☞ 8

## வெசாக் வாரம்

'நல்ல குணங்களைக் கொண்ட உன்னத மக்களுடன் பழகுவோம்' எனும் தொனிப்பொருளில் இந்த ஆண்டு தேசிய வெசாக்பண்டிகைகொண்டாடப்படுகின்றது.

இன்றுமுதல்மே16வரைஒருவாரகால வெசாக்வாரம்பிரகடனப்படுத்தப்படவுள்ளது. இதன் ஆரம்ப நிகழ்வு ஜனாதிபதி ☞ 8

## பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்குக சபையில் கஜேந்திரகுமார் வலியுறுத்து

பயங்கரவாதத்தடைச்சட்டத்தை மிக மோசமான சட்டமாக இந்த ஆளும்தரப்பு ஏற்றுக்கொண்டுள்ள நிலையில் இன்றும் அந்தச் சட்டத்தை அமுல்படுத்துகிறது. இது நியாயமற்றது. பலஆண்டுகாலமாக சிறையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளை விடுவிக்க ஆளும்தரப்பு உரியநடவடிக்கைகளை எடுக்கவேண்டும் எனத்தமிழ்தேசிய மக்கள்முன்னணியின்நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற கணக்காய்வுஅறிக்கைகளின்ஊடாக முன்வைக்கப்படுகின்றபரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கான வேலைத் திட்டமொன்றைத் தயாரித்தல் தொடர்பான தனிநபர் பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றும்போது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசமைப்பிலுள்ள முக்கிய அம்சங்களை ☞ 2

## 8 மாத காலப் பகுதிக்குள் 79 பேர் சுட்டுக் கொலை

### அதனால் மக்களுக்கு பாதிப்பில்லை என்கிறார் அமைச்சர் விஜேபால

போதைப்பொருள் மற்றும் பாதாள குழுக்களின் செயற்பாடுகள் ஒன்றுடன் ஒன்று தொடர்புப்பட்டுள்ளன. 2024 செப்டெம்பர்முதல்2025மே7வரையான காலப்பகுதியில் இடம்பெற்ற 79 துப்பாக்கிச் சூடுகளில் 52 பேர் உயிரிழந்துள்ளனர். இருந்தாலும் இந்தச் சம்பவங்களால் பொதுமக்களின் அன்றாடவாழ்க்கைக்குப் பாதிப்புஏற்படவில்லைஎன்றுபொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற அலுவல்கள் அமைச்சர் ஆனந்த ☞ 8

### மாணவி தற்கொலை விவகாரம்:

## சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை விசாரணையை கையிலெடுத்தது

தற்போது பரவலாகப் பேசப்பட்டு வரும் கொட்டாஞ்சேனைப் பாடசாலை மாணவி தற்கொலை தொடர்பில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை தனியான விசாரணைகளை ஆரம்பித்துள்ளது. அத்தோடு கொட்டாஞ்சேனை மற்றும் பம்மபலப்பிட்டி பொலிஸாரிடமிருந்து இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணை அறிக்கையும் கோரப்பட்டுள்ளது.

பாடசாலைகளுக்குள் இடம்பெறும் மாணவர் மீதான துன்புறுத்தல்கள் தொடர்பில் தெரியப்படுத்தாமல், பாடசாலையின் நற்பெயரைப் பாதுகாக்கும் நோக்கத்தில் முறைப்பாட்டாளர்களை பலவீனப்படுத்துவதற்கான செயற்பாடுகள் இந்தச் ☞ 8

## தனியார் வகுப்பு நிர்வாகிக்கு எதிராக நடவடிக்கை தேவை

### எதிர்க் கட்சித் தலைவர் வலியுறுத்து

நாடாளுமன்றம் வெள்ளிக்கிழமை கூடிய நிலையில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சரிடமும், கல்வி அமைச்சர் என்ற வகையில் பிரதமரிடமும் கொட்டாஞ்சேனை மாணவியின் தற்கொலை தொடர்பில் விசேட கூற்றை முன்வைத்தார். இது தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்ததாவது:

கொழும்பில் கடந்த ஏப்ரல் 29 அன்று 15 வயது மாணவி ஒருவர் மாடி வீடொன்றில் இருந்து குதித்துத் தற்கொலை செய்துள்ளார். குறித்த மாணவி அவரது பாடசாலையில் துஷ்பிரயோகத்துக்கு ஆளான நிலையில், பாடசாலையை மாற்றிக்கொண்டுள்ளார். அதன் பின்னர் அவர் மேலதிக வகுப்புக்குச் சென்ற சந்தர்ப்பத்தில், குறித்த தனியார் கல்வி நிலையத்தின் நிர்வாகி, அந்த மாணவிக்கு நிகழ்ந்த பாலியல் துஷ்பிரயோக சம்பவத்தை பகிரங்கமாக கூறி அவமானப்படுத்திய காரணத்தினால் ஏற்பட்ட மனஉளைச்சலால் அந்த மாணவி தற்கொலை செய்துகொண்டுள்ளார் என்றே தெரிவிக்கப்படுகிறது. ☞ 8

## ஆசிரியருக்கு கட்டாய விடுப்பு

கொட்டாஞ்சேனை, கல்பொத்த வீதியிலுள்ள ஜன நிவாச வளாகத்தில் வசித்து வந்த 16 வயது பாடசாலை மாணவி ஒருவர் தற்கொலை செய்து கொண்ட சம்பவம் தொடர்பாக சந்தேகத்திற்கிடமான ஆசிரியர் ஒருவர் கட்டாய விடுமுறையில் அனுப்பப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக அறிக்கை ஒன்றை நேற்று மாலை வெளியிட்டுள்ள கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு, இச்சம்பவம் தொடர்பான பொலிஸ் 'பி' அறிக்கை தமது அமைச்சிற்கு கிடைத்துள்ளதாகவும், அதன் அடிப்படையில் சம்பவத்துடன் தொடர்புடைய ஆசிரியரை, நிறுவன ☞ 8

## மகளிர் விவகார அமைச்சர் உடன் பதவி விலகவேண்டும்

### ஐக்கிய மக்கள் சக்தி வலியுறுத்து

சரோஜா போல்ராஜ் மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சருக்கான பொறுப்பிலிருந்து விலகி, சர்ச்சைக்குரிய மேலதிக வகுப்பு ஆசிரியைப் பாதுகாக்கும் வகையிலேயே செயற்பட்டுக் கொண்டிருக்கின்றார். எனவே அவர் இந்த அமைச்சுப்பதவியை வகிப்பதற்கு பொருத்தமற்றவர். சரோஜா போல்ராஜ் உடனடியாக அமைச்சுப் பதவியை இராஜிநாமா செய்யவேண்டும் என ஐக்கியமக்கள்சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹிணி கவிரத்ன தெரிவித்தார். ☞ 8

காலைக்கதிர்
Kalaikkathir

## இனி இது .....

உறுப்பினர்களைக் கொண்டுள்ள கட்சிக்கு உபதவிசாளர் பதவியை வழங்கலாம் என்ற எண்ணவோட்டம் தமிழ் அரசுக் கட்சிக்கு இருப்பதாகத் தெரிகின்றது. ஆனால் அதற்கான பேரம் பேசல்களில் ஈடுபட அது தயாராக இல்லை. தமது தவிசாளரின் அல்ல முதல்வரின் பெயர் முன்மொழியப்படும்போது அதனை ஆதரிக்கும் கட்சிகளில் தமக்கு நிகரான அல்லது நெருக்கமான ஆசனங்களை உடைய கட்சிக்கு இந்த வாய்ப்பை வழங்க முடியும் என்பதே அதன் எதிர்பார்ப்பு.

இந்த அடிப்படையில் நல்லூரில் தமிழ் மக்கள் கூட்டணி தமிழ் அரசுக் கட்சியை ஆதரித்தால் அதற்கு உப தவிசாளர் பதவி கிடைப்பதற்கு வாய்ப்பு உள்ளது. மணிவண்ணன் தரப்பு அதற்காகப் பெரும் எதிர்பார்ப்போடு காத்திருக்கிறது. ஆனால், தேர்தலுக்கு முன்னர் இந்தக் கூட்டணியின் விக்னேஸ்வரன் தரப்பு செய்த ஒரு செயல் இதற்கு முட்டுக்கட்டையாக வந்தமையுமோ என்கிற அச்சமும் இருக்கின்றது.

யாழ்ப்பாணம் மாநகர சபையில் தமிழ் மக்கள் கூட்டணி போட்டியிடமுடியவில்லை. அதன் வேட்புமனு நிராகரிக்கப்பட்டிருந்தது. இதையடுத்து அங்கு மணிவண்ணன் தரப்பின் ஆதரவு யாருக்கு என்பது பெரும் கேள்வியாக இருந்தது. நல்லூர் போன்ற ஏனைய சபைகளின் எதிர்காலம் கருதி மணிவண்ணன் தரப்பினரும் தமிழ் அரசுக் கட்சிக்குத் தமது ஆதரவை வழங்குவதற்குத் தயாராக இருந்தனர். தமிழ் அரசுக் கட்சியுடன் இது தொடர்பில் பேச்சுக்களும் நடத்தப்பட்டன. இணக்கம் ஏற்படக்கூடிய ஒரு நிலைதான் தொடக்கத்தில் இருந்தது.

அதன்படி மாநகர சபையில் தமிழ் அரசை கூட்டணி ஆதரிப்பதற்குச் சில நிபந்தனைகளும் விதிக்கப்பட்டன, அதாவது அவர்கள் சில சலுகைகளை எதிர்பார்த்தார்கள். தமிழ் அரசு அதற்கும் இணங்கியது. பேச்சளவில் இருந்தால் எங்கே ஏமாற்றிவிடுவார்களோ என்று கருதிய கூட்டணி இது விடயத்தில் தனக்கு எழுத்து மூல ஒப்பந்தம் வேண்டும் என்றது. இந்த இடத்தில் விக்னேஸ்வரன் இந்த விவகாரத்திற்குள் நுழைந்திருந்தார். தமிழ் அரசு அதற்கும் சரி என்றது. தமிழ் அரசின் பொதுச் செயலாளரிடம் இருந்த எழுத்து மூல உறுதிமொழி அனுப்பப்பட்டது.

அப்போது தேர்தல் பரப்புரைகள் முடிவதற்கு இன்னும் ஒரு சில தினங்களே இருந்தன. தமிழ் அரசு அனுப்பிய எழுத்துமூல உறுதிமொழியை விக்னேஸ்வரன் ஒரு சிறு அளவிலான புரிந்துணர்வு ஒப்பந்தம் என்கிற அளவிற்கு விரிவாக்கி அதில் கையெழுத்திடவேண்டும் என்று நிபந்தனை வைத்தார். தமிழ் அரசுத் தரப்பில் அதற்கும் சம்மதம் தெரிவிக்கப்பட்டது. விக்னேஸ்வரனால் வரைவு அனுப்பப்பட்டது. அப்போது சுமந்திரன் கொழும்பு சென்றிருந்தார். தமிழ் அரசுக் கட்சிக்கான கூட்டணியின் ஆதரவைப் பகிரங்கமாக அறிவிக்கும்படியும் தான் யாழ்ப்பாணம் திரும்பியதும் உடன்படிக்கையில் கையெழுத்திடுவார் என்றும் அவர் மணிவண்ணன் தரப்பினரிடம் உறுதியளித்தார். அவர்கள் செய்வதாக வாக்குறுதியளித்தனர். ஆனால் கடைசி வரையில் செய்யவில்லை.

சுமந்திரன் யாழ்ப்பாணம் திரும்பியதும் வரைவைத் தூக்கிக்கொண்டு அவரிடம் ஓடிவந்தனர். அப்போது தேர்தல் பரப்புரைக் காலம் முடிவடைவதற்கு ஓரிரு நாள்களே இருந்தன. அவர்கள் கொண்டு வந்த உடன்படிக்கைப் பிரதியை வாங்கி அதில் குறிப்பிடப்பட்டிருந்த ஒரு விடயத்தைச் சுட்டிக்காட்டினார் சுமந்திரன். அதில், யாழ். மாநகர சபை எல்லைக்குள் தமிழ் அரசுக் கட்சிக்கு ஆதரவாக அதனோடு சேர்ந்து பரப்புரையில் கூட்டணியும் ஈடுபடும் என்று போடப்பட்டிருந்தது. "அப்படிப் பரப்புரையில் ஈடுபட்டீர்களா?" என்று சுமந்திரன் கேட்டார். வந்தவர்கள் இல்லை என்றனர்.

இந்த உடப்படிக்கையைத் தயாரித்தவர்கள் நீங்கள், இந்த விடயத்தை அதில் குறிப்பிட்டதும் நீங்கள் அப்படியிருக்கும்போதும் அதை இவ்வளவு நாளும் செய்யாமல் நாளைக்குப் பரப்புரை முடியப்போகும் நிலையில் வந்து இந்த உடன்படிக்கையில் எப்படிக் கையெழுத்து வைப்பது என்று கேட்டார் சுமந்திரன். நீங்கள் பகிரங்கமாக அறிவிப்பதாகக் கூறியதையும் கூட இதுவரையில் செய்யவில்லை, இந்த நிலையில் எப்படி ஒரு உடன்படிக்கைக்குப் போக முடியும்? இதற்குமேல் இதில் கையெழுத்து வைக்க முடியாது என்று திருப்பி அனுப்பிவிட்டார் சுமந்திரன்.

இந்தப் பின்னணியில் நல்லூரில் எந்த முகத்தை வைத்துக்கொண்டு தமிழ் அரசுக் கட்சியுடன் பேச்சு நடத்தமுடியும் என்கிற இக்கட்டில் நிற்கின்றது தமிழ் மக்கள் கூட்டணி. ஆனாலும் அங்கு அந்தக் கட்சிக்கு 6 ஆசனங்கள் உள்ளன. தமிழ் அரசுக் கட்சி 7 ஆசனங்களைக் கொண்டிருக்கின்றது. ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணிக்கு 3 ஆசனங்கள் இருக்கின்றன. 20 ஆசனங்களைக் கொண்ட சபையில் தமிழ் அரசு ஆட்சியமைக்க 11 பேரின் ஆதரவு தேவை. ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி மற்றும் ஈபிடிபி ஆதரவளித்தால் கூட தமிழ் அரசால் ஆட்சியமைக்க முடியும். ஆனால் தமிழ் மக்கள் கூட்டணி ஆதரவளித்தால் அதற்கு உப தலைவர் பதவியும் கிடைக்க வாய்ப்புள்ளது.

தமிழ் மக்கள் கூட்டணியின் இளையவர்களின் அரசியலா அல்லது விக்னேஸ்வரனின் அரசியல் மற்றும் அவரது மாணவனான சுமந்திரனுக்கும் அவருக்கும் இடையிலான ஈகோ வெல்லுமா என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம். அடுப்பில இருந்து நெருப்பில விழுந்த கதை மாதிரி ஆகிவிட்டது மணிவண்ணன் தரப்பினரின் நிலை. பரிதாபம்தான்.

உள்ளூராட்சி சபை தொடர்பில் மற்றொரு கொசுறுத் தகவலும் காதில் விழுந்தது. தீவகத்தில் சில சபைகளில் தென்மராட்சி போன்ற சபைகளிலும் தமிழ் காங்கிரஸுடன் சேர்ந்து ஆட்சியமைப்பது குறித்து கிளிநொச்சி ஜமீன் பேச்சு நடத்தும் முயற்சிகளில் இருக்கிறாராம் என்று கேள்வி. யார் செய்தால் என்ன கட்சிக்கு நல்லது நடந்தால் சரிதான் என்கிற நிலைப்பாட்டில் உள்ளது தலைமை. யார் யாரோடு சேர்வார்கள், யார் தூய அரசியல்வாதிகள் யார் துரோகி அரசியல்வாதிகள் யார் ஒழிக் கப்படவேண்டியவர்கள் என்பதெல்லாம் இந்த ஆட்சியமைப்பு முயற்சிகளோடு ஒரு வெளிச்சத்திற்கு வரும்போலத்தான் தெரிகிறது. பார்ப்போம்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## பயங்கரவாத....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமுல்படுத்துமாறு சுமார் 38 ஆண்டுகாலமாக தேசிய மற்றும் சர்வதேச சமூகம் தொடர்ந்து வலியுறுத்தி வரும் நிலையில்தான் இந்த நாடு உள்ளது.

இவ்வாறான பிரேரணைகளைக் கொண்டு வந்து ஆளும்தரப்பின் படுமோசமான செயற்பாடுகளைத் தடுப்பதற்கு மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவோம். ஆய்வு அறிக்கைகளின் பரிந்துரைகளை கடந்த ஆளும்தரப்புக்கள் செயற்படுத்தவில்லை என்று குற்றஞ்சாட்டி, கடும் எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் நாட்டு மக்கள் தேசிய மக்கள் சக்திக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆணை வழங்கினார்கள்.

கடந்த கால ஆய்வு அறிக்கைகளை கருத்திற்கொண்டு தேசிய மக்கள் சக்தி மிக மோசமான பயங்கரவாத தடைச்சட்டத்தை இரத்துச் செய்வதாகவும், அதற்கு மாற்றீடாக பிறிதொரு சட்டத்தை இயற்றப் போவதில்லை என்றும் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க தனது ஜனாதிபதித் தேர்தலின்போது தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டிருந்தார்.

ஆனால், பயங்கரவாதத் தடைச்சட்டம் இன்றும் நடைமுறையில்தான் உள்ளது. 12 அல்லது 13 தமிழ் அரசியல் கைதிகள் இன்றும் சிறையில் உள்ளார்கள். இந்த சட்டத்தின் பிரகாரம் தவறாகக் கைது செய்யப்பட்டவர்களை விடுவிப்பதற்கு ஆளும்தரப்பு தயாரில்லை.

கிருபாகரன் எனும் அரசியல் கைதி தொடர்பில் இந்த நாடாளுமன்றத்தில் பலமுறை பேசியுள்ளேன். அம்பாந்தோட்டை சிறைச்சாலைக்கு அவர் மாற்றப்பட்டுள்ளார். பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் அவர் தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டுள்ளார். அவர் வழங்கிய குற்ற ஒப்புதல் வாக்குமூலம் ஒரு வழக்கில் நிராகரிக்கப்பட்டு, அந்த வாக்குமூலம் பலவந்தமான முறையில் பெற்றுக்கொள்ளப்பட்டதாக குறிப்பிடப்பட்டு வழக்கில் இருந்து விடுவிக்கப்பட்டார்.

இதன் பின்னர் அந்த நிராகரிக்கப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை அடிப்படையாகக் கொண்டு மற்றொரு வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு கிருபாகரன் இன்றும் சிறையில் தடுத்துவைக்கப்பட்டுள்ளார். இவரது வழக்குகள் கொழும்பு நீதிமன்றங்களில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ள நிலையில் நியாயமற்ற வகையில் அம்பாந்தோட்டை பகுதிக்கு அவர் கொண்டு செல்லப்பட்டுள்ளார். சிறையில் வாடுகிறார்.

அதேபோல் ஆனந்தவர்மன் என்றழைக்கப்படும் அரவிந்தன் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். மிக மோசமான பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளை ஆளும்தரப்பு உடனடியாக விடுவிக்கவேண்டும் - என்றார்.

### மாணவி தற்கொலையில் குற்றஞ்சாட்டப்படும்

# ஆளும்தரப்பு அமைப்பாளரின் வீட்டுக்குப் பாதுகாப்பு தரலாமா?

## முஜிபுர் ரஹ்மான் எம்.பி. கேள்வி

*கொட்டாஞ்சேனை மாணவி தற்கொலை சம்பவத்துடன் தொடர்புபட்டிருக்கிறார் என்று குற்றஞ்சாட்டப்படும் ஆளும்தரப்பு அமைப்பாளரின் வீட்டுக்கு 7 பொலிஸாரின் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. குற்றம் சாட்டப்படும் ஒருவருக்கு இப்படி பாதுகாப்புக் கொடுக்கலாமா? இதுவே வேறு கட்சியின் அமைப்பாளர் ஒருவர் மீது இத்தகைய குற்றச்சாட்டுச் சுமத்தப்பட்டிருந்தால் அவர் இப்போது சிறையில் இருந்திருப்பார் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் நேற்று நாடாளுமன்றத்தில் சுட்டிக்காட்டினார்.*

*இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:*

*பாடசாலை மாணவியொருவர் தற்கொலை செய்துகொண்டமை தொடர்பில் இந்தச் சபையில் பேசப்படுகிறது. எனினும் 2024 ஒக்டோபர் மாதத்தில் சம்பவம் நடந்துள்ளது. டிசெம்பர் மாதத்திலேயே பம்பலப்பிட்டி பொலிஸ் நிலையத்திற்கு பெற்றோர் அழைக்கப்பட்டு வாக்குமூலம் பெறப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்ட ஆசிரியர் 2025 ஜனவரி மாதத்தில் கைது செய்யப்படுகின்றார். சிறுவர் பாலியல் முறைகேட்டுக் குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட இவர் இரண்டு நாட்களில் பிணையில் விடுவிக்கப்படுகின்றார்.*

*சிறுவர் பாலியல் குற்றச்சாட்டு அவர் மீது சுமத்தப்பட்டிருப்பதால் அவர் பணி இடைநீக்கம் செய்யப்பட்டிருக்கவேண்டும். ஆனால் 2025 மே 8 தான் அவருக்கு இடமாற்றம் வழங்கப்படுகின்றது. போராட்டம் மேற்கொள்ளத் திட்டமிட்ட பின்னரே இந்த நடவடிக்கைகளை கல்வி அமைச்சு முன்னெடுத்துள்ளது. இந்த 5 மாதங்களாக என்ன செய்தது கல்வி அமைச்சு? பிரதமர் கல்வி அமைச்சராக பதவியேற்று 6 மாதங்களாகியும் ஏன் இது தொடர்பில் நடவடிக்கை எடுக்கவில்லை? நீதி கிடைக்காத காரணத்தினாலேயே மக்கள் வீதிக்கு இறங்கினர்.*

*உங்கள் கட்சி அமைப்பாளர் ஒருவருக்கு எதிராகவும் இந்த விடயத்தில் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டு ஊடகங்களில் செய்திகள் வந்துள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் நிபுணாராச்சி தனது உரையில் குறிப்பிட்டுள்ளார். அந்தக் குற்றச்சாட்டு சும்மா தெரிவிக்கப்படவில்லை. மாணவியின் பெற்றோர் அது தொடர்பில் கூறுகின்றனர். குறித்த நபரே வகுப்பறையில் அந்த மாணவியை நிற்கவைத்து, பாடசாலையில் நடந்த சம்பவம் தொடர்பில் மற்றைய மாணவர்களின் முன்னால் மாணவியை அவமதித்துள்ளார். அவர் உங்களின் கட்சியின் அமைப்பாளர் என்று நாங்கள் கூறவில்லை. நீங்களே இதனை அரசியலாக்க வேண்டாம் என்று கூறினீர்கள்.*

*குறித்த ஆசிரியர் தொடர்பில் எடுக்கப்பட்ட நடவடிக்கை தொடர்பான முறைமை எப்படி இருந்திருக்கிறது என்பதனைப் பாருங்கள். அந்தச் செயற்பாட்டு முறை வேகமானதாக இருந்திருந்தால் அந்த மாணவியின் உயிரைக் காப்பாற்றியிருக்கலாம்.*

*சம்பந்தப்பட்ட அமைப்பாளரின் வீட்டுக்கு முன்னால் 7 பொலிஸார் பாதுகாப்பில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். குற்றம் சாட்டப்படும் ஒருவருக்கு இப்படி பாதுகாப்பு கொடுப்பதா? சிறுமியின் இறப்பிற்கு நேரடியாகவோ மறைமுகமாகவோ பொறுப்பு கூற வேண்டியவரின் வீட்டுக்கு பாதுகாப்பு வழங்கப்படவேண்டுமா? அவர் வேறு கட்சியை சேர்ந்தவராக இருந்திருந்தால் இன்று சிறையில் இருந்திருப்பார்.*

*அவர் மறைமுகமாகவோ, நேரடியாகவோ இந்த மாணவியை அவமதித்துள்ளார் என்று பெற்றோரால் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. இவ்வாறான நிலைமையிலேயே அவருக்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. இவர் உங்கள் கட்சியின் அமைப்பாளர் மட்டுமல்ல கடந்த பொதுத் தேர்தலில் கொழும்பு மாவட்டத்தில் போட்டியிட்டவர். 35 ஆயிரம் வாக்குகளையும் பெற்றுள்ளார். அவர் மீது முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் தொடர்பில் விசாரணைகளில் தீர்மானிக்கப்படும்.*

*மக்கள் ஆளும்தரப்பிடம் முறைமை மாற்றம் தொடர்பிலேயே எதிர்பார்த்தனர். அதனையே நீங்களும் எதிர்பார்த்தீர்கள். ஆனால் நீங்கள் முன்னெடுக்கும் நடவடிக்கைகள் மிகவும் மெதுவானதாக இருக்கிறது - என்றார்.*

*முஜிபுர் ரஹ்மான் முன்வைத்த சில விடயங்கள் தொடர்பில் ஒழுங்குப் பிரச்சினையை எழுப்பிப் பதிலளித்த ஆளும் கட்சி உறுப்பினர் லக்ஷ்மன் நிபுணாராச்சி தெரிவித்ததாவது:*

*இந்த விடயத்தில் இவர்கள் அரசியல் செய்யப் போவதில்லை என்று கூறிக்கொண்டே எமது அமைப்பாளர் ஒருவரை இதனுள் சம்பந்தப்படுத்துகின்றனர். எமது அமைப்பாளர் இதற்குள் கிடையாது. அவர் குறித்த கல்வியகத்தின் உரிமையாளரே, அவர் ஆசிரியரும் கிடையாது. இவர்கள் விடயத்தை முழுமையாகத் திரிபுபடுத்துகின்றனர். திரிபுபடுத்தியே ஊடகங்களுக்கு கூறுகின்றனர்.*

*அந்தப் பிள்ளை தொடர்பான கவலை எங்களிடம் இருக்கிறது. பிரதமரும் இது தொடர்பில் கூறியுள்ளார். தவறுகள் மற்றும் தாமதங்கள் இருந்தால் அது தொடர்பான விசாரணைகள் நடத்தப்பட்டு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார்.*

## சூழல்நேய ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தனது உரையில் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

யாழ். மாவட்டச் செயலராக நான் பணியாற்றிய காலத்தில் இந்தப் பகுதியில் சுற்றுலாத்துறைக்கான அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன. துரதிஸ்டவசமாக அப்போதிருந்த பிரதேச சபை நிர்வாகம் எமக்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்கவில்லை.

பல முதலீட்டாளர்கள் முதலிடுவதற்காக வருகின்றபோதும் எமது திணைக்களங்களால் அவர்களுக்கு முழுமையான ஒத்துழைப்பு கிடைக்கப்பெறவில்லை. தமது பகுதிகளுக்கும் சபைகளுக்கும் வருமானத்தை ஈட்டித் தரக் கூடிய முதலீட்டாளர்களின் தேவைகளை நிறைவேற்றிக் கொடுப்பதற்கு தயக்கம் காண்பிக்கின்றனர். இழுத்தடிப்புச் செய்கின்றனர். ஏற்கனவே இங்கு முதலீடுகளைச் செய்த பலரும், எமது நிர்வாகங்களின் அசமந்தமான செயற்பாடு காரணமாக கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றனர்.

இந்த நிலைமை தொடருமானால் இங்கு முதலீட்டாளர்கள் வருவதற்கு தயங்குவர். அது எமது மாகாணத்தைப் பல வகையிலும் பாதிக்கும். இளையோருக்கு வேலை வாய்ப்பு தேவை என்று நாம் கோரும் அதேவேளை அதற்கு முதலீடுதான் வழியாக இருக்கும் நிலையில் அதனையும் இழப்பது பெரும் பாதிப்பை ஏற்படுத்தும்.

இங்கு அமைக்கப்பட்டுள்ள பூங்கா போன்று பல வேலைத் திட்டங்கள் எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படும் என நம்புகின்றேன். அத்துடன் இந்தப் பிரதேசத்தில் இவ்வாறான முயற்சியை மேற்கொண்டுள்ள நெய்தல் சூழல் நேயப் பூங்காவின் நிறுவுனர் அனுராஜீக்கும் பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன் -ஷ- என்றார்.

இந்தப் பூங்கா 2 ஆண்டுகளில் 7 கட்டங்களாக அபிவிருத்தி செய்யப்படவுள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir

# தமிழர் காணிகளுக்கு 3 மாத காலக்கெடுவுடன் அரசுரிமைகோரி அந்தக் காணிகளில் குடியேற்றங்களை அமைக்கப் போகிறார்கள்

## கஜேந்திரகுமார் எம்.பி. குற்றச்சாட்டு

தமிழர் காணி சம்மந்தப்பட்ட விடயத்தை நியாயம் இல்லாமல் 3 மாத காலக்கெடு வழங்கி அரச உரிமை கோர முயல்வது அந்த காணிகளை இயற்கைநீதிக்குபுறம்பாகப்பறித்துஅந்தகாணிகளை குடியேற்றங்களுக்கு பயன்படுத்தப் போகிறார்கள் என தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும், யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

கடந்த மார்ச் மாதம் 28 ஆம் திகதி அரசாங்கம் ஒரு வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டுள்ளது. விசேடமாக வடமாகாணத்தில் 4 மாவட்டத்தில் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் 3669 ஏக்கரும், முல்லைத்தீவில் 1703 ஏக்கரும், கிளிநொச்சியில் 515 ஏக்கரும், மன்னாரை சேர்ந்த 54 ஏக்கருமாக மொத்தம் 5941 ஏக்கர் காணிகளை தனியார்கள் தங்களுக்குரிய காணி உறுதிகளை உறுதிப்படுத்தாத பட்சத்தில் அதனை அரச காணிகளாக பிரகடனப்படுத்தப் போவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

உங்களுக்கு நன்றாக தெரியும். தமிழ் மக்களின் வடக்கு - கிழக்கில் வாழும் மக்களுக்கு சமமான சனத்தொகைஇன்றுபுலம்பெயர்தேசங்களில்வாழ்ந்து கொண்டுஇருக்கிறார்கள்.அவர்கள்இந்தத்தீவைவிட்டு உயிர் அச்சுறுத்தல் காரணமாகவே வெளியேறினார்கள். அவர்களது அனைத்து சொத்துககளையும் விட்டு பெரும்பான்மையானவர்கள் அந்த நாடுகளில் சட்டவிரோதமாக நுழைந்து புகலிடம் கேட்கும் நிலை தான் இருந்தது.

இந்த காணிகளின் சொந்தக்காரர்கள் பலர் அந்த நாடுகளில் இருந்து திரும்ப முடியாத நிலையில் இருக்கிறார்கள் என்பதையும் நீங்கள் விளங்கிக் கொள்ள வேண்டும். அதுமட்டுமல்லாமல், வெளிநாடுகளில் வாழும் சில மக்களின் காணிகளை உறுதிப்படுத்த முடியாத நிலையும் இருக்கிறது. இதனை முதல் இருந்த அரசாங்கங்கள் ஏற்றுக் கொண்டு அவர்கள் முதல் இருந்த காணியில் இங்கு போர்க் காலத்தில் புதிதாக இருந்தவர்கள் உரிமை பெற முடியாத வகையில் சட்டத்தை வைத்திருந்தார்கள்.

புலம்பெயர் மக்களின் காணிகளுக்கு அநீதி நடைபெறும்என்பதற்காகவே அவைநிறுத்தப்பட்டன. இந்த அரசாங்கம் முதல் இருந்த அரசாங்கங்களை இனவாதி என்றார்கள். அவர்களே அந்த காணிகளை அபகரிப்பதை நிறுத்தி வைத்திருந்தார்கள். அங்கு பிரச்சனை இருக்கிறது என்பதை விளங்கிக் கொண்டார்கள். இந்த அரசாங்கம் பயங்கரவாத தடுப்பு சட்டத்தை நீக்காமல் அமுல் படுத்தி கொண்டு இருக்கிறார்கள். இந்த நிலையில் காணி உரிமையாளர்கள் இந்த மூன்று மாதத்திற்குள் காணி உறுப்பத்திரங்களை உறுதிப்படுத்த முடியாத நிலையே இருக்கிறது.

இது புலம்பெயர் தமிழ் மக்களைப் பற்றி கதைக்கின்றோம். தற்போது வடக்கு - கிழக்கில் வாழும் தமிழ் மக்கள் கூட உரிமை கோரக் கூடிய நிலையில் இருந்தும் அவர்கள் பல தடவை இடம்பெயர வேண்டிய நிலை இருந்தது. போர் காரணமாக தமது அனைத்து சொத்துக்களையும் விட்டு ஓட வேண்டி வந்தது. அப்படிப்பட்ட நிலையில் இந்தக் காணிகளை உரிமை கோருமாறு கோருவது ஏற்றுக் கொள்ளக் கூடிய விடயமா?. இந்தக் காணி சம்மந்தப்பட்ட பிரச்சனை தமிழ் மக்களுடையஇனப்பிரச்சனையுடன்சம்மந்தப்பட்டது என்பதை விளங்கிக் கொள்ள வேண்டும். இது இந்த அரசாங்கத்திற்கு தெரியாதா?

தமிழர் காணி சம்மந்தப்பட்ட விடயத்தை நியாயம் இல்லாமல் 3 மாத காலக்கெடு வழங்கி அரச உரிமை கோர முயல்வது அந்த காணிகளை இயற்கைநீதிக்குபுறம்பாகபறித்து அந்த காணிகளை குடியேற்றங்களுக்கு பயன்படுத்தப் போகிறார்கள். இதனை நான் பொறுப்போடு கூறுகின்றேன். இந்த அரசாங்கம் விடயம் விளங்காமல் அவசரமாக செய்யும் விடயம் அல்ல. நான் இதற்கு முதல் பல தடவை இந்த நாடாளுமன்றத்திலும், வெளியிலும் சுட்டி காட்டி வருகின்றேன். வடக்கு-கிழக்கில் இருக்கும் இராணுவம், முப்படை முழுக்க அங்கு இருக்கும் தமிழ் மக்களை எதிரி என்ற கண்ணோட்டத்தில் இருக்கிறார்கள்.

முதல் இருந்த அரசாங்கம் போல் இந்த அரசாங்கமும் அந்த மக்களுடைய உரிமைகளை அங்கீகரிக்க தயார் இல்லை எனில் அந்த மக்கள் சிலவேளை போராட முயற்சிகலாம் என்ற பயத்தால் தமிழர்தாயககரையோரபிரதேசங்கள் அனைத்தையும் போர்காலத்தில் கடற்தொழில்ல் செய்ய முடியாத நிலையை ஏற்படுத்தி பொருளாதார தடை இருந்தது. அதனால் அந்த மக்கள் வாழ முடியாத நிலையில் வெளியேறினார்கள். பேர்க்காலத்தில் இதை தான் செய்தீர்கள்.

அந்த மக்களுடைய நிரந்தர உரிமைகளை அழிக்கின்ற, பறிக்கின்ற செயற்பாட்டை இந்த அரசாங்கம் செய்யப் போகின்றது. முதல் இருந்த அரசாங்கங்கள் எல்லாம் இனவாதிகள், தமிழ் மக்களுக்கு எதிராக செயற்பட்டவர்கள்



என்று சொல்லி தம்மை புனிதர்களாக காட்டி ஆட்சிக்கு வந்தவர்கள் தான் இந்த அநியாயத்தை செய்யப் போகிறார்கள் என்பதை பொறுப்போடு சொல்கின்றேன்.

இதுவெறுமனே தமிழர்களை குறி வைக்கும் விடயமல்ல. தமிழ் பேசும் மக்களை குறிவைக்கும் விடயமாக மாறும். வேணும் என்றால் எழுதி வையுங்கள். இன்று வடக்கு மாகாணத்தை குறிவைக்கும் இவர்கள், அடுத்து இது கிழக்கு மாகாணத்திற்கும் போகும்.

இந்தஅரசாங்கத்திற்கு முதுகெலும்பு இல்லை. இந்த இரணுவத்தின் தமிழ் விரோத செயற்பாட்டை நிறுத்த, இராணுவத்தின் மனோ நிலைய மாற்ற இவர்களுக்கு ஏலாது. அல்லது இவர்களும் இராணுவத்தின் மோசமான இனவாத செயற்பாடுகளுக்கு துணை போகும் வகையில் செயற்படுகிறார்கள் என்று தான் பார்க்கலாம்.

இந்த தேர்தலில் இந்த அரசாங்கம் வடக்கு - கிழக்கில் சந்தித்து இருக்கின்ற பாரிய பின்னடைவை சரியான கோணத்தில் விளங்கிக் கொள்ள வேண்டும். இதனை சரியாக புரிந்து இந்த வர்த்தமானியை மீளப்பெற வேண்டும். காணி சமந்தமான பிரச்சனை தமிழ் மக்களது அடிப்படை பிரச்சினை. இதில் தமிழ் மக்கள் தலைவர்களோடு ஓர் இணக்கப்பாட்டுக்கு வராமல் செய்யுமாக இருந்தால் மீண்டும் வடக்கு-கிழக்கு தமிழ் மக்களுக்கும், தெற்கில் வாழும் தெற்கு மக்களுக்கும் ஏற்பட்டு வரும் நல்லிணக்கத்தை குழப்பும் விடயமாக தான் இருக்கும். இதன் மூலம் ஒட்டுமொத்த தமிழ் மக்களையும் எதிரி ஆக்கப் போகிறீர்கள் எனத் தெரிவித்தார். 100

# தோற்றாலும் ரபிக்குக்கே போனஸ் ஆசனத்தை தருக

## ஆதரவாளர்கள் கோரிக்கை

(ஹலால்தீன்)

திருகோணமலை மாவட்டம் கிண்ணிய பிரதேச சபை தேசிய மக்கள் சக்தியின் நடுவூற்று வட்டாரத்தில் வேட்பாளராக யூசுப் ரபீக் போட்டியிட்டு சுமார் 405 வாக்குகளைப் பெற்று 14 வாக்குகள் வித்தியாசத்தில் தோல்வி அடைந்திருந்தார்.

இது தோல்வி என்று சொல்ல முடியாது. ஏனென்றால் அவர் வேறு வட்டாரத்தை வசிப்பிடமாகக் கொண்டவர்.

இன்னொரு (வேறு ஒரு) வட்டாரத்தில் போட்டியிட்டு அதிக வாக்குகளை பெற்றுள்ளார்.

இவரின் அந்த நல்ல பண்புகளுக்காக மக்கள் இவரை ஆதரித்து தேசிய மக்கள் சக்திக்கு 405 வாக்குகளை கொடுத்திருப்பது இந்த அரசியல் வரலாற்றிலே இது ஒரு சாதனையான நிகழ்வாகும்.

தேசிய மக்கள் சக்திக்கான வாக்கு வங்கியை தொடர்ந்தும் பேண வேண்டுமாக இருந்தால் தேசிய மக்கள் சக்திக்கு கிடைத்திருக்கும் இரண்டு(2) போனஸ் ஆசனத்தில் ஒன்றை இவருக்கு வழங்குவதனால் தேசிய மக்கள் சக்தியின் நடுவுற்று வட்டார வாக்கு வங்கியை தொடர்ந்து நிலை நிறுத்திக் கொள்ள முடியும்.

விகிதாசாரஅடிப்படையில் அந்த போனஸ் ஆசனம் இவருக்குத்தான் கிடைக்க வேண்டும் என அவரது ஆதரவாளர்கள் தெரிவிக்கின்றனர்.

# இந்திய ரோட்டரிக் கழகத்தின் நிதியில் யாழில் மாணவர்களுக்கு சைக்கிள்கள்

(சுபேசன்)

இந்தியரோட்டரிமாவட்டம் 209-82இன் நிதிப் பங்களிப்பில் அண்மையில் யாழ்ப்பாணத்தில் தேவைப்பாடுடைய 20 மாணவர்களுக்கு சைக்கிள்கள் வழங்கி வைக்கப்பட்டிருந்தன.





சுன்னாகம் பாரம்பரிய ரோட்டரிக் கழகம், பெனிசுலா ரோட்டரிக் கழகம் மற்றும் சுன்னாகம் ரோட்டரக்ட் கழகம் ஆகியன இணைந்து முன்னெடுத்த மேற்படி உதவித்திட்டம் வழங்கும் நிகழ்வில் பிரதம விருந்தினராக இலங்கைமற்றும்மாலைதீவிற்கான ரோட்டரிஆளுநர்சுஷேனரணதுங்க கலந்து சிறப்பித்திருந்தார்.

மேலும் ரோட்டரி மாவட்ட செயலாளர்காமினிமதுநாயக்க,ரோட்டரியன் காந்தீபன், டாக்டர் எஸ்.சிவரூபன் ஆகியோரும் கலந்து சிறப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# கடலை தாயாகக் கருதும் பொழுது! (உலக கடல் தாய் தினம் - மே 10)

**மனிதனின் வாழ்வியல் வளர்ச்சி, பயணம், உணவு, வளங்கள், வாணிபம் என அனைத்துக்கும் அடித்தளமாக இருக்கிறது கடல். நம்மைத் தாய்போல் காக்கும் கடலை ஒவ்வொருவரும் நினைவுகூரும் நாளாக உலக கடல் தாய் தினம் (Mother Ocean Day) ஆண்டுதோறும் மே 10 அன்று கொண்டாடப்படுகிறது. இன்று நாம் கடலை ஒரு வளம் அல்ல, உயிரும் ஒழுக்கமும் கொண்ட தாய் என உணரவேண்டும். அதுவும் இலங்கையின் வடக்கு கிழக்குப் பகுதியில் வாழ்பவர்கள் நிச்சயமாக கடலின் மதிப்பை உணர்ந்திருக்கவேண்டும்.**

**கடல் என்பது வெறும் நீர்ப்பரப்பு அல்ல; அது உயிர்களின்தொட்டிலாகவும், காலநிலைகட்டுப்பாட்டின் முதன்மை நிலையாயும் உள்ளது. உலகில் உள்ள ஆக்சிஜனின் சுமார் 50% இதன் வழியேதான் உருவாகிறது. மீன், சிப்பி, பாம்பு, பவளங்கள், கொடிகள், புல்கள் என எண்ணற்ற உயிர்கள் வாழும் சமுத்திரம், மனிதனுக்கும் வாழ்வாதாரமாக இருக்கிறது. சுமார் 3 பில்லியன் மக்களுக்கும் மேலானோர் தங்களது வாழ்வாதாரத்தை கடலின் வளங்களை சார்ந்தே நிர்வகிக்கின்றனர்.**

**ஆனால் இன்று இந்த தாயை நாம் திட்டமிட்ட முறையில்அழித்துக்கொண்டிருக்கிறோம். பிளாஸ்டிக் கழிவுகள், எண்ணெய் கசியல்கள், தீவிர வணிக மீன்பிடிகள், ஆழ்கடல் சுரங்கப்பணிகள், கடலோர நகர அபிவிருத்தி ஆகியவை எல்லாம் கடலின் இயல்பை பூரணமாகக் குலைத்துவிட்டன. ஐ.நா. அறிக்கைகள், ஆண்டுதோறும் 8 மில்லியன் மெட்ரிக் டன் பிளாஸ்டிக் கடலில் சேர்கிறது என பதிவு செய்கின்றன.**

**இத்தகையசூழலில், கடலைப்பற்றியவிழிப்புணர்வை ஏற்படுத்தும் நாள்கள் மிக அவசியம். உலக கடல் தாய் தினம் என்பது ஒரு புனித கடமையை நினைவூட்டும் நாள். கடலை ஒரு வளமாக மட்டும் அல்ல, வாழ்வின் அடிப்படை கூறாகவும், பாசமிகு தாயாகவும் பார்ப்பது – மனித சமுதாயத்தின் ஒவ்வொரு அங்கத்துக்கும் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வழி.**

**இன்றைய அரசுகளும், நிறுவனங்களும், மக்களும், கடலைப் பாதுகாப்பதற்கான முறையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டிய நேரம் இது. பிளாஸ்டிக்குக்கு மாற்றான தீர்வுகள், பசுமை வணிக முறைகள், கடல் பாதுகாப்பு சட்டங்கள், கல்வித் திட்டங்கள், கடலோரைச் சுற்றுச்சூழல் பாதுகாப்பு திட்டங்கள் போன்றவை அடிப்படையாக அமைய வேண்டும். கடல் உணர்வு கல்வியை பள்ளி நிலை முதல் ஊக்குவிக்க வேண்டும்.**

**நாம் பாசத்தோடும், பொறுப்புடனும் கடலை அணுகும் பொழுதே, அது நமக்கு மீண்டும் தாயான அருளுடன் தன்னிகரற்ற வளங்களைத் தரும். கடலைத் தாயாகக் கருதும் விழிப்புணர்வு நாம் அனைவருக்கும் வளர வேண்டும்.**

# உள்ளூராட்சி மன்றங்களில் ஆட்சியமைப்பது குறித்து ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சு

## கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவிப்பு

உள்ளூராட்சி மன்றங்களில் ஆட்சி அமைப்பது தொடர்பில் ஜனநாயகத் தமிழ் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சு நடத்தியுள்ளோம் எனத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்றங்களில் ஆட்சி அமைப்பது தொடர்பில் கேட்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

தமிழ் தேசியப் பேரவை உள்ளூராட்சி மன்றங்களில் ஆட்சி அமைப்பது தொடர்பான கலந்துரையாடல்களை முன்னெடுத்துள்ளோம்.

ஜனநாயகதமிழ்த் தேசியகூட்டமைப்பைச் சார்ந்த அதன் தலைவர் சித்தார்த்தன் மற்றும் அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் மற்றும் அதன் பங்காளிக் கட்சியின் தலைவர் சுரேஸ் பிறேமச்சந்திரன் ஆகியோருடன் மேற்படி விடயம் தொடர்பில் உரையாடியுள்ளோம். அவர்களிடமிருந்து சாதகமான பதில் கிடைத்தால் இணைந்து ஆட்சியமைக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடுவோம்.

அத்துடன், வவுனியா வடக்கு நெடுங்கேணியில் சிங்கள பௌத்த இனவாத தேசிய மக்கள் சக்தி ஆட்சியைக் கைப்பற்றுவதனைத் தடுக்கும் வகையில் ஏனைய தமிழ் கட்சிகளுடன் இணைந்து ஆட்சியமைப்பதற்கு ஒத்துழைப்பு வழங்குவோம் எனத் தெரிவித்தார். 100

# அருகம்பை கடற்கரை பகுதியை அழகுபடுத்திய இராணுவத்தினர்

(பாறுக் ஷிஹான்)

ஆசியாவின் நான்காவது பெரிய கடல் பாறைஅம்பாறைமாவட்டத்தின்பொத்துவில் அருகம்பை பகுதியில் அமைந்துள்ளது நீர் சறுக்கல் உள்ளிட்ட விளையாட்டிற்கு நல்ல சூழல் இருப்பதால், வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் அறுகம்பை விரிகுடா சுற்றுலாப் பகுதியை விரும்புகிறார்கள்.

அடுத்தவாரத்திற்குள் அருகம்பை விரிகுடா சுற்றுலா மண்டலம் திறக்கப்படவுள்ள நிலையில் அருகம்பை விரிகுடாவில் கடற்கரை சுத்தம் செய்யும் திட்டம் நேற்று ஆரம்பிக்கப்பட்டது. இலங்கை இராணுவத்தின் 24 ஆவது பிரிவின் தளபதி மேஜர் ஜெனரல் சமிந்த கலப்பத்தியின் வழிநடத்தில் இராணுவ வீரர்கள் அருகம்பை விரிகுடாவில் ஒரு நாள் கடல்சுவரை சுத்தம் செய்யும் பணியைத் தொடங்கினர்.

இதற்காக சுமார் 200 இராணுவ வீரர்கள் ஈடுபடுத்தப்பட்டனர். அதே நேரத்தில் அறுகம்பை சுற்றுலா காவல்துறை பொது சுகாதார பரிசொதகர்கள் மற்றும் பொத்துவில் பிரதேச சபை அதிகாரிகளும் இச்சுத்தம் செய்யும் செயற்பாட்டில் இணைந்திருந்தனர். இது தவிர தற்போது இங்கு வருகை தரும் பல சுற்றுலாப் பயணிகளும் இந்த நிகழ்வில் இணைந்தமை குறிப்பிடத்தக்கது.

24 ஆவது படைப்பிரிவின் துணைத் தளபதி பிரிகேடியர் பிரியங்க குலதிலக 242 ஆவது படைப்பிரிவின் தளபதி கேணல் துஷார கேலே கோரலே 14 ஆவது லயன்ஸ் படைப்பிரிவின் கட்டளை அதிகாரி மேஜர் சுரேஷ் பெரேரா மற்றும் 24 ஆவது படைப்பிரிவின் சிவில் தொடர்பு அதிகாரி கேணல் சிசிர குமார ஆகியோரும் இந்நிகழ்வில் பங்கேற்றிருந்தனர்.









# தமிழர் ஆட்சியை உறுதிசெய்ய தமிழ் அரசுக் கட்சிக்கு அழைப்பு

## கிழக்குத் தமிழர் கூட்டமைப்பு விடுத்தது

(சக்திவேல்)

பல்வேறு விட்டுக் கொடுப்பிற்கு மத்தியில் தமிழர்களின் ஆட்சியை உறுதி செய்வதற்கு இலங்கை தமிழரசுக் கட்சிக்கு கிழக்கு தமிழர் கூட்டமைப்பு பகிரங்க அழைப்பு விடுப்பதாக தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் பொதுச் செயலாளர் பூ.பிரசாந்தன் வியாழக்கிழமை மாலை மட்டக்களப்பில் உள்ள அவரது கட்சியின் அலுவலகத்தில் இடம் பெற்ற ஊடக சந்திப்பில் தெரிவித்துள்ளார்.

இதன் போது அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில் -

கடந்த உள்ளுஜூராட்சி மன்ற தேர்தலில் கிழக்கு தமிழர் கூட்டமைப்பின் படகு சின்னத்திற்கு மட்டக்களப்பு மாவட்ட மக்கள் வழங்கிய ஆணைக்காக அந்த மக்களுக்கு எமது நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள உள்ளூராட்சி சபைகளில் மக்கள் எமக்கு வழங்கிய ஆணையின் பிரகாரம் 37 ஆசனங்கள் எமக்கு கிடைத்துள்ளன. இதனை மக்கள் எமக்கு வழங்கிய பெரும் ஆணையாகவே நாம் பார்க்கின்றோம். அதனடிப்படையில் கிழக்கு மக்களுக்கு தனித்துவமான ஓர் அரசியல் குரல் தேவை என்பதை மக்கள் ஏற்றுக் கொண்டிருக்கின்றார்கள்.

எமது கிழக்கு தமிழர் கூட்டமைப்பானது வாகரையில் ஏழு ஆசனங்களை பெற்றிருக்கின்றோம். அதே போன்று மண்முனை தென் எருவில் பற்று பிரதேசத்திலும் இரண்டு வட்டாரங்களை தம்வசப்படுத்தியதுடன் மண்முனை தென் மேற்கு பிரதேசத்தில் ஆறு ஆசனங்களைப் பெற்று கிழக்கு தமிழர் கூட்டமைப்பு முன்னிலையில் நிற்கின்றது.

அந்த அடிப்படையில் கிழக்கு தமிழர் கூட்டமைப்பிற்கு மக்கள் வழங்கிய ஆணையின் அடிப்படையில் தமிழர்களின் ஆட்சியினை உறுதிப்படுத்துவதற்காக இணைந்து செயற்படுவதற்காக இலங்கை தமிழரசுக் கட்சிக்கு பகிரங்கமாக அழைப்பு விடுக்கின்றோம்.



மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏறாவூர் நகர சபையில் இருக்கின்ற எல்லைப் புற கிராமங்கள் இரண்டில் கிழக்கு தமிழர் கூட்டமைப்பு வெற்றி பெற்றிருக்கின்றது.

அதனடிப்படையில் மக்களின் ஆணைக்கு கட்டுப்பட்டு தனிப்பட்ட அல்லது கட்சி விருப்பு வெறுப்பிற்கு அப்பால் கிழக்கு மாகாணத்தில் தமிழர்கள் அனைவரும் ஒருமித்து பயணிக்க வேண்டும் என்பதை மக்கள் உணர்த்தியிருக்கின்றார்கள்.

அதன் அடிப்படையில் இலங்கை தமிழரசுக் கட்சிக்கு கிழக்குத் தமிழர் கூட்டமைப்பு தமிழர்களின் ஆட்சியை உறுதி செய்வதற்காக அழைப்பு விடுக்கின்றோம். அவ்வாறு ஒன்றாக பயணிக்கின்ற போது கோறளைப்பற்று வடக்கு, கோறளைப்பற்று, ஏறாவூர்ப்பற்று, மட்டக்களப்பு மாநகர சபை, மண்முனை தென் எருவில் பற்று, மண்முனை தென் மேற்கு மற்றும் போரதீவுப்பற்று ஆகிய உள்ளூராட்சி மன்றங்களிலும் நாங்கள் ஆட்சியமைக்க முடியும். அதாவது தமிழர்களின் ஆட்சியை உறுதிப்படுத்தும் வாய்ப்பு இருக்கின்றது.

பல்வேறு விட்டுக் கொடுப்பிற்கு மத்தியில் பயணிக்கின்ற கிழக்கு தமிழர் கூட்டமைப்பின் இந்த கோரிக்கையை ஏற்று இலங்கை தமிழரசுக் கட்சியினர் ஒன்றாக பயணிப்பதற்கு முன் வருவார்கள் என நம்புகின்றோம். ஏன் என்றால், 2015 ஆண்டு மாகாண சபை தேர்தலின் பின்னர் எமது கட்சியின் தலைவர் சந்திரகாந்தன் அவர்களினால் பகிரங்கமாக அழைப்பு விடுத்திருந்தோம்.

மாகாண சபை ஆட்சியினை நடாத்துவதற்கு நாங்கள் உங்களுடன் சேர்ந்து பயணிப்பதற்கு உறுதியாக இருக்கின்றோம். ஆனால் அந்த கருத்தை நிராகரித்திருந்தார்கள். மீண்டும் 2018 ஆம் வருடமும் சேர்ந்து பயணிக்க அழைப்பு விடுத்திருந்தோம் அதனையும் நிராகரித்திருந்தார்கள். அதன் அடிப்படையில் கிழக்கு மக்கள் நில, நிருவாக, பொருளாதார இருப்புக்களில் கிழக்கு மக்கள் பாதிக்கப்பட்டிருந்ததை அவர்கள் மறந்திருக்க மாட்டார்கள் என நாங்கள் நம்புகின்றோம். - என்றார்.

வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்



# கிண்ணியாவில் ரஹ்மானியா நகர் ஆதரவாளர்கள் பட்டாசு கொளுத்தி மாலையிட்டு வெற்றிக் களிப்பு

(ஹஸ்பர்)

கிண்ணியா நகர சபைக்கான தேர்தலில் ரஹ்மானியா வட்டாரத்தில் ஐக்கிய மக்கள் சக்தி சார்பாக போட்டியிட்டு வெற்றியீட்டிய எம்.எம்.மஹ்திக்கான வரவேற்பும் பால் சோறு வழங்கும் நிகழ்வும் நேற்று மாலை 5.30.மணிக்கு ரஹ்மானியா நகரில் இடம்பெற்றது.

இம்முறைஐக்கியமக்கள்சக்திசார்பாககிண்ணியா நகர சபைக்கான தேர்தலில் ரஹ்மானியா நகர் வட்டாரம் சார்பாக போட்டியிட்டு சுமார் 721 வாக்குகளை பெற்று தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

அவரை வரவேற்கும் நிகழ்வு நேற்று மாலை ஐந்து முப்பது மணிக்கு ரஹ்மானியா நகரில் உள்ள ஆதரவாளர்கள் பட்டாசு கொளுத்தி மாலையிட்டு வரவேற்றதுடன்.

பாற்சோறு வழங்கி வெற்றிக் களிப்பை கொண்டாடினர்.

இக்களிப்பின் பின் ஊடகளுக்கு கருத்து தெரிவிக்கும் போது -

என்னை தெரிவு செய்த மக்களுக்கு நான் கடமைப்பட்டுள்ளேன்.

இம்மக்களின் அபிலாசைகளை நிறைவேற்றுவதை எனது நோக்கமாகும் என்று தெரிவித்தார்.






# கல்முனையில் மூன்று நாள்கள் இறைச்சிக் கடைகளுக்கு பூட்டு

(அஸ்லம் எஸ்.மௌலானா)

தேசிய வெசாக் பண்டிகையை முன்னிட்டு பொது நிர்வாக, மாகாண சபைகள், உள்ளூராட்சி அமைச்சின் அறிவுறுத்தலுக்கு அமைவாக எதிர்வரும் 2025.05.12 முதல் 2025.05.14 வரையான மூன்று நாள்களும் கல்முனை மாநகர சபை எல்லைக்குட்பட்ட மாட்டிறைச்சி, ஆட்டிறைச்சிமற்றும்கோழிஇறைச்சிக் கடைகள் யாவும் மூடப்படும் என மாநகர ஆணையாளர் ஏ.ரி.எம். றாபி அறிவித்துள்ளார்.

இம்மூன்று நாள்களும் கல்முனை மாநகர சபைக்குட்பட்ட விலங்கறுமனையும்மூடப்பட்டிருக்கும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதற்கான பணிப்புரைகளை சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு ஆணையாளர் விடுத்துள்ளார்.

மேலும், தனிப்பட்ட இடங்களில் மாடு, ஆடு மற்றும் கோழி உள்ளிட்ட விலங்குகளை அறுக்க வேண்டாம் எனவும் அனைத்து இறைச்சிக் கடைகளின் உரிமையாளர்களும் பொதுமக்களும்இவ்வறிவுறுத்தலுக்கு அமைவாக செயற்படுமாறும் ஆணையாளர் ஏ.ரி.எம். றாபி கேட்டுக் கொண்டுள்ளார்.

# புதிய அதிபர் கடமையேற்பு

(ஷினாஸ்)

கல்முனை கல்வி வலயத்திற்குட்பட்ட மருதமுனை, பாண்டிருப்பு அல்-மினன் வித்தியாலயத்தின் புதிய அதிபராக எஸ்.எம் ஜௌஹைறுத்தீன் கடமையை பொறுப்பேற்றுக் கொண்டார்.

அல்-மினன் பாடசாலைக்கு புதிய அதிபரை நியமிப்பதற்கான நேர்முகப் பரீட்சை, கல்முனை வலயக் கல்வி அலுவலகத்தால் விண்ணப்பம் கோரப்பட்டு வலயக்கல்வி பணிப்பாளர் எம்.எஸ்.சஹௌதுல் நஜீம் தலைமையில் நடைபெற்ற நேர்முகப் பரீட்சையின் பின்னர், மருதமுனையை சேர்ந்த எஸ்.எம் ஜௌஹைறுத்தீன் புதிய அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார். அதிபர் கடமையை பொறுப்பேற்கும் நிகழ்வு, பதில் அதிபராக கடமையாற்றிய அமானுல்லா தலைமையில் கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ். சஹௌதுல் நஜீம், பிரதிக் கல்விப் பணிப்பாளர் எம்.எச். எம். ஜாபீர் ஆகியோரது முன்னிலையில் இடம்பெற்றது.



இதில் பொறியியலாளர் எம். எஸ். பஸீல் உட்பட பாடசாலை அபிமானிகள், நலன்விரும்பிகள், பாடசாலையின் ஆசிரியர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

1974ஆம் ஆண்டு மே மாதம் 29ஆம் திகதி பிறந்த எஸ்.எம் ஜௌஹைறுத்தீன் தனது முதல் ஆசிரிய நியமனத்தை 2001ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் முதலாம் திகதி சம்மாந்துறை கல்வி வலயத்திற்குட்பட்ட நாவிதன்வெளி கோட்டத்தில் சதுஃவிவேகானந்தா மகா வித்தியாலயத்தில் பெற்று ஆசிரியர் சேவையில் இணைந்து கொண்டார். பின்னர் 2016ஆம் ஆண்டு மே மாதம் 09ஆம் திகதி இலங்கை அதிபர் சேவை போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்து 2016 மே மாதம் 09ஆம் திகதி முதல் அதிபர் சேவைக்குள் உள்ளீர்ப்பு செய்யப்பட்ட இவர், மருதமுனை மதீனா வித்தியாலயத்தில் அதிபர் கடமையை பொறுப்பேற்று அதன்பின்னர் 2017 பெப்ரவரி 01முதல் கல்முனை அல்-ஹம்றா வித்யாலயத்தில் பிரதி அதிபராக தனது சேவையை தொடர்ந்து கொண்டிருந்த நிலையில் கடந்த விஜௌபழ்கிழமை முதல் பாண்டிருப்பு அல்-மினன் வித்தியாலயத்திற்கு புதிய அதிபராக நியமிக்கப்பட்டு கடமையை பொறுப்பேற்றுக்கொண்டார்.

இவர் மருதமுனையை சேர்ந்த ஏ.எல். செயினுலாப்தீன், ஐ.எல். சரிபா உம்மா ஆகியோரது இரண்டாவது புதல்வராவார் என்பதுடன் மருதமுனை ஷம்ஸ் மத்திய கல்லூரியின் பழைய மாணவன் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# தனிமனித தீர்மானம் என்ற பேச்சு அபாண்டமானது

## சிவஞானம் தெரிவிப்பு

தனி மனித தீர்மானம் எடுக்கும் கட்சியாக நாங்கள் இல்லை. தலைவர் என்ற முறையில் நான் இதனை தெளிவாகச் சொல்கிறேன். முன்பு அவ்வாறான நிலைமை இருந்திருக்கலாம். ஆனால் தற்போது அவ்வாறில்லை. ஆகக் குறைந்தது தலைவர், செயலாளராவது கலந்து பேசி எல்லா விடயங்களையும் இணைந்து தான் செயற்படுகிறோம். ஆகவே, தனி மனித தீர்மானம் என்ற பேச்சு அபாண்டமானது என அக்கட்சியின் தலைவர் சி.வீ.கே.சிவஞானம் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் கல்வியங்காட்டில் உள்ள அவரது அலுவலகத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் இதனை தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறுகையில் -

வடக்கு, கிழக்கு பெரும்பான்மையான சபைகளை கைப்பற்றி ஆளும் வகையில் முதல் நிலையில் இலங்கை தமிழ் அரசுக் கட்சி இருக்கிறது. அவ்வாறு எமக்கு வாக்களித்து எம்மை அங்கீகரித்து ஏற்றுக்கொண்ட, எமக்கு ஊக்கமளித்த, தமிழ்த் தேசியத்தை நேசிக்கின்ற அனைவருக்கும் வடக்கு, கிழக்கு வாழும் மக்கள் எல்லோருக்கும் கட்சி சார்பில் நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

குறிப்பாக யாழ்ப்பாணத்தில் மீண்டெழுவதற்கான வாய்ப்பைத் தந்த வாக்காளர் பெருமக்களுக்கு நன்றி கூறுகின்றோம்.

மிகக் கேவலமாக தேர்தல் காலத்தில் எங்களை எதிர்த்துப் போட்டியிட்டு இல்லாதவற்றை சொல்லி தங்களின் மகிழ்ச்சியை கொண்டாடியவர்கள் இப்பொழுது நாங்கள் தேசிய மக்கள் கட்சியோடு டீல் பேசுகிறோம் என்று பொறுப்புள்ளவர்களே குறிப்பிட்டு பேசுகிறார்கள்.

தமிழ்அரசுக்கட்சியின்பதில்தலைவர் என்ற முறையில் பொறுப்போடு இதனை மறுதலிக்கிறேன்.

எந்த சந்தர்ப்பத்திலும் இலங்கை தமிழ் அரசுக் கட்சி தேசிய மக்கள் சக்தியோடு இணைந்து ஆட்சி அமைப்பதற்கு எந்த முயற்சியும் எடுக்கவில்லை. எந்த டீலையும் செய்யவில்லை. இந்த பரப்புரைகள் வேலை செய்யாது என்பதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

தேசிய மக்கள் சக்தியின் முக்கிய பிரமுகர் நளிந்த ஜயதிஸ்ஸ கூட தம்மை தமிழ் கட்சிகள் அணுகவில்லை என்பதை கூறியிருக்கிறார்.

அடுத்த கட்ட செயற்பாடுகளை ஆராய்வதற்காக நாளைய தினம் சனிக்கிழமை அரசியல் குழு கூடி, இவ்வாறான தேர்தல் விடயங்களை எந்தெந்த சபைகளில், எவ்வாறு செயற்படுவது, யார் யாரை முன்னிலைப்படுத்தி தவிசாளர் முதல்வரை தீர்மானிப்பது என்பது தொடர்பாக கலந்துரையாடவுள்ளோம்.

ரெலோ, புளோட் ஆகிய கட்சிகளின் தலைவர்கள் எங்கள் கட்சியின் பொதுச்செயலாளருடன் பேசியுள்ளார்கள். செல்வம் அடைக்கலநாதன் தாம் தமிழ் தேசிய கூட்டமைப்பாக செயற்பட விருப்பம் தெரிவித்துள்ளார்.

காங்கிரஸ் உட்பட தமிழ் தேசிய கூட்டமைப்பாகசெயற்பட்ட கட்சிகளாக நாம் மீண்டும் செயற்பட கோரிக்கை விடுக்கிறோம். - என்றார்.

# இலங்கை – இந்திய நாடாளுமன்ற நட்புறவுச் சங்க தலைவராக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவு

இலங்கையின் பத்தாவது நாடாளுமன்றத்துக்கான இலங்கை - இந்திய நாடாளுமன்ற நட்புறவு சங்கம், சபாநாயகர் ஜகத் விக்ரமரத்னவின் தலைமையில், வியாழக்கிழமை நிறுவப்பட்டது. இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா, இந்தக் கூட்டத்தில் கௌரவ விருந்தினராக அழைக்கப்பட்டிருந்தார்.

இந்தக் கூட்டத்தில் பல்வேறு அரசியல் குழுக்கள், அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உட்பட சுமார் 100 உறுப்பினர்கள் பங்கேற்றனர். இந்தக் கூட்டத்தின் போது, சுகாதாரம் மற்றும் ஊடகத்துறை அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ, சங்கத்தின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

நாடாளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், ஜே.சி. அலவதுவல, தனுர திசாநாயக்க, ரவி கருணாநாயக்க ஆகியோர் சங்கத்தின் பிரதி தலைவர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். மேலும் நாடாளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜயவர்தன செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் சிறிதரன் மற்றும் அனுஷ்கா திலகரத்ன ஆகியோர் உதவிச் செயலாளர்களாகவும், பெருந்தோட்ட உட்கட்டமைப்பு பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப் சங்கத்தின் பொருளாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

இந்திய நாடாளுமன்ற மக்களவைத் தலைவர் ஓம் பிர்லா, இலங்கை - இந்திய நாடாளுமன்ற நட்புறவு சங்கத்தை மீண்டும் கூட்டியதற்காக சபாநாயகருக்கும் சக எம்.பி.க்களுக்கும் வாழ்த்து தெரிவித்து சிறப்பு கடிதம் அனுப்பியிருந்தார்.

நிகழ்வில் உரையாற்றிய சபாநாயகர் ஜகத் விக்ரமரத்ன, இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான பகிரப்பட்ட வரலாறு, மதம் மற்றும் கலாசாரத்தின் இணையற்ற தொடர்பை வலியுறுத்தினார். இந்தியா இலங்கையின் நம்பகமான நண்பராக தன்னை மீண்டும் மீண்டும் நிரூபித்துள்ளதாகவும், இருதரப்பு கூட்டாண்மையின் தொடர்ச்சியான விரிவாக்கத்தை வரவேற்றதாகவும் சபாநாயகர் மேலும் தெரிவித்தார்.

உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா உரையாற்றுகையில், இரண்டு 'நாகரிக இரட்டையர்களுக்கு' இடையிலான பகிரப்பட்ட ஜனநாயக மரபுகளை அடிக்கோடிட்டுக் காட்டினார். தலைவர், அலுவலகப் பணியாளர்கள் மற்றும் சங்க உறுப்பினர்களை வாழ்த்திய அவர், நாடாளுமன்ற நட்புறவு சங்கம் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான மக்களிடையேயான தொடர்பை மேலும் வலுப்படுத்தும் என்றும் நம்பிக்கை தெரிவித்தார்.

# பருத்தித்துறையில் சுகாதார சீர்கேட்டுடன் இயங்கிய வெதுப்பகம், உணவகத்துக்கு 70,000: ரூபா தண்டம்



யாழ்ப்பாணம் - பருத்தித்துறை நகர சபைக்கு உட்பட்ட பகுதியில் சுகாதார சீர்கேட்டுடன் இயங்கி வந்த வெதுப்பகம் மற்றும் உணவகம் என்பவற்றுக்கு 70 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை நகர சபையின் ஆளுகைக்குட்பட்ட பகுதியில் மருத்துவ சான்றிதழ் இல்லாமல் வெதுப்பகப் பொருள்களை கையாண்டமை, தனிநபர் சுகாதாரம் பேணாமை, வெதுப்பகச் சுற்றாடலில் இலையான்கள் பெருக இடமளித்தமை, அழுகிய உருளைக்கிழங்குகளை உணவு தயாரிப்புக்கு களஞ்சியப் படுத்தியமை, வெதுப்பகப் பொருள்களுடன் தொற்று ஏற்படும் வண்ணம் இரசாயன பொருள்களை களஞ்சியப் படுத்தி வைத்திருந்தமை ஆகிய குற்றச்சாட்டுக்களின் கீழ் நகர சபையின் பொது சுகாதார பரிசோதகர் ப.தினேஸ் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் வழக்கு தொடர்ந்தார்.

இந்த வழக்கு நேற்று வெள்ளிக் கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

அவ்வேளை தன் மீதான குற்றச் சாட்டை வெதுப்பக உரிமையாளர் ஏற்றுக்கொண்டதையடுத்து, உரிமையாளரைக் கடுமையாக எச்சரித்த நீதிமன்றம், அவருக்கு 50 ஆயிரம் ரூபா தண்டம் விதித்தது.

மருத்துவ சான்றிதழ் இல்லாமல் உணவினை கையாண்டமை, தனிநபர் சுகாதாரம் பேணாமை, குடிப்பதற்கும் சுத்திகரிப்பிற்கும் பயன்படும் நீரானது குடிக்கத்தக்கது என உறுதி செய்யத் தவறியமை, சமைத்த மற்றும் சமைக்காத உணவுப்பொருள்களை தொற்று ஏற்படும் வண்ணம் களஞ்சியப்படுத்தியமை உள்ளிட்ட குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் உணவக உரிமையாளருக்கு எதிராக தொடுக்கப்பட்ட வழக்கில் உரிமையாளர் தன் மீதான குற்றச்சாட்டை ஏற்றுக்கொண்டார்.

அதனையடுத்து, மேற்கூறப்பட்ட குற்றங்களின் அடிப்படையில் உணவக உரிமையாளருக்கு நீதிமன்றம் 20 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதித்தது.






## இணைய ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இன்று(09) முதல் ஆரம்பமாகின்றது.

WWW.UGC.AC.LK எனும் இணையத்தள முகவரியின் ஊடாக இதற்கான வசதிகள் வழங்கப்பட்டுள்ளதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்தது. எதிர்வரும் 30ஆம் திகதி நள்ளிரவு 12 மணி வரை பல்கலைக்கழக அனுமதிக்காக பதிவு செய்ய முடியும் என ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

அதன்பின்னர்பதிவுநடைமுறையின்போது தெரிவு செய்யப்பட்ட பல்கலைக்கழக விருப்ப ஒழுங்கை மாற்றியமைப்பதற்காக மாத்திரம் இரண்டுவார அவகாசம் வழங்கப்படவுள்ளது.

கடந்த உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் இம்முறை பல்கலைக் கழகங்களுக்கு 43,300 மாணவர்களை இணைத்துக்கொள்ளப்படவுள்ளனர்.

## தனியார்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாணவிக்கு துஸ்பிரயோகம் நிகழ்ந்திருப்பது 2024 ஒக்டோபர் 23. அதன் பின்னர் துஸ்பிரயோகத்துக்குள்ளாக்கிய ஆசிரியருக்கு 2025 மே 8 இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவத்துக்கு காரணமானஆசிரியருக்குஇடமாற்றம்வழங்க பல மாதங்கள் கடந்துள்ளன. இந்த சம்பவம் தொடர்பில்சிறுவர்பாதுகாப்புஅதிகாரசபைக்கும் முறைப்பாடு தெரிவிக்கப்படவில்லை என விடயத்துக்கு பொறுப்பான அமைச்சர் தெரிவித்திருந்தார்.

இவ்வாறானதொருசம்பவம்இடம்பெற்றால், முறைப்பாடு தெரிவிக்கப்படும் வரை பார்த்துக்கொண்டிருக்காமல், சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை மற்றும் சட்டம் ஒழுங்கு பாதுகாப்பு அமைச்சு ஆகியன இணைந்து உடனடியாக நடவடிக்கை எடுக்க முடியுமான ஒரு முறைமையை ஏற்படுத்தவேண்டும். அதேநேரம் குறித்த மாணவியின்பிரச்சினையைபகிரங்கப்படுத்திய தனியார்வகுப்புநிலையநிர்வாகிக்குஎதிராகவும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

## சிறுவர் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சம்பவத்தின் பின்னால் உள்ளமை கண்டறியப்பட்டுள்ளதாகச் சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை தெரிவித்துள்ளது.

இதையடுத்து, கல்வி அமைச்சின் செயலாளர், சகல வலய கல்வி பணிப்பாளர்களுக்குவிசேட அறிவித்தல்களை வழங்கியுள்ளார். மாணவர்களுக்கெதிரான ஏதேனுமொரு சம்பவம் பதிவான உடனேயே பாடசாலை அதிபரால் அல்லது பொறுப்பு கூற வேண்டிய தரப்பினரால் சிறுகவர் அதிகார சபையின் 1929 என்ற அவசர தொலைபேசி இலக்கத்துக்கு அறிவிக்கப்படவேண்டும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அல்லது ncpa@chaildprotection.gov.lk என்ற மின்னஞ்சல் முகவரியின் ஊடாகவும் தெரியப்படுத்தலாம்.

சிறுவர் துஸ்பிரயோகம் அல்லது துன்புறுத்தலுடன் தொடர்புடைய அதிபர் அல்லது ஆசிரியர்கள் சம்பவம் குறித்த வழக்கு விசாரணை நிறைவடையும்வரை மாணவர்களுடன் தொடர்புபடுவதைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவேண்டும்.

அதிபர் அல்லது ஆசிரியர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் சந்தர்ப்பத்தில் மாணவர்கள் மேலும் பாதிக்கப்படாமலிருப்பது உறுதிப்படுத்தப்பட வேண்டும். சிறுவர் அதிகாரசபை அல்லது பொலிஸாரால் விசாரணைகள் முன்னெடுக்கப்படும் போது எக்காரணத்துக்காகவும் மாணவர்களை பாடசாலையைவிட்டுநீக்குவதற்குநடவடிக்கை எடுக்கப்படக்கூடாதுஎனவும்கல்விஅமைச்சின் செயலாளர் மேலும் அறிவுறுத்தியுள்ளார்.

## மகளிர் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்றில்நேற்றுவெள்ளிக்கிழமை விசேட அறிவிப்பொன்றை வெளியிட்டு அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்போது பேசுபொருளாகியுள்ள கொட்டாஞ்சேனை மாணவியின் தற்கொலை தொடர்பில், பெண்ணாக, தாயாக, ஆசிரியராக, விடயத்துக்குப்பொறுப்பானஅமைச்சர்சரோஜா போல்ராஜ் பொறுப்பின்றிச் செயற்படுகின்றார்.

மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சரான அவர், அமைச்சர் என்ற பொறுப்பிற்கும், ஆளும்தரப்பு என்ற பொறுப்பிற்கும் அப்பால் செயற்பட்டுக்கொள்கின்றார். பாடசாலையில் துன்புறுத்தலுக்கு உள்ளானதோடு மாத்திரமின்றி, மேலதிக வகுப்பொன்றிலும் துன்புறுத்தலுக்கு உள்ளான குறித்த மாணவி மனநலம்பாதிக்கப்பட்டிருந்தார்என அமைச்சர் குறிப்பிடுகின்றார்.

அந்த மாணவி உள ரீதியாகப் பாதிக்கப்பட்டிருந்தார் என்பதற்காக இந்தச் சம்பவம் மூடி மறைக்கப்படவேண்டும் என்று அமைச்சர் கூறுகின்றாரா? இது தொடர்பில் கேள்வியெழுப்புவதற்காக நாடாளுமன்றத்தில் நான் முயற்சித்தபோது சபாநாயகர் உட்பட ஆளுங்கட்சியினர் எவரும் எனக்கு கருத்து தெரிவிப்பதற்கு வாய்ப்பளிக்கவில்லை.

பொதுத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தியில் போட்டியிட்ட குறித்த மேலதிக வகுப்பு ஆசிரியரைப் பாதுகாப்பதற்காகவா ஆளும்தரப்பு இவ்வாறு செயற்படுகின்றது? மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சர் சரோஜாபோல்ராஜ்அமைச்சுப்பதவியிலிருந்து விலகவேண்டும். அவர் இந்த சம்பவம் தொடர்பில் வெளியிட்டுள்ள கருத்துக்களின் அடிப்படையில் இந்த அமைச்சுப் பதவியை வகிப்பதற்கு அவர் பொருத்தமற்றவர் என்பது தெளிவாகியுள்ளது. எனவே அவர் உடனடியாக பதவி விலக வேண்டும் - என்றார்.

## 8 மாத காலப் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விஜேபால தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற அமர்வின்போது சமூகக் கட்டமைப்பில் நாளாந்தம் இடம்பெறும் துப்பாக்கிச்சூட்டு சம்பவங்கள் மற்றும் உயிரிழப்புக்கள் குறித்து எதிர்க்கட்சியின் உறுப்பினர் தயாசிறி ஜயசேகர முன்வைத்த கேள்விக்குப் பதிலளிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பாதாளக் குழுக்களின் செயற்பாடு மற்றும் அவர்களை உருவாக்கியவர்கள், போசித்தவர்கள் குறித்து அனைவரும் நன்கு அறிவார்கள். பாதாளக் குழுக்களின் செயற்பாட்டை இல்லாதொழிப்பதற்கு கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

திட்டமிட்ட பாதாள குழுக்களுடன் தொடர்புடைய 260 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்டவர்கள் மற்றும் கைது செய்யப்படாதவர்களின் விவரங்களை வெளியிட முடியாது.

போதைப்பொருள் வியாபாரிகள் மற்றும் பாதாள குழுக்களுக்கு இடையிலான முரண்பாடுகளின் வெளிப்பாடாகவே துப்பாக்கிச் சூடுகள் நடக்கின்றன. இதனால் பொதுமக்களின் அன்றாட வாழ்வாதாரத்துக்கு எவ்வித பாதிப்பும் இல்லை. ஏனெனில் கடந்த காலங்களில் இதனைக் காட்டிலும் பல படுகொலைகள் இடம்பெற்றன.

இராணுவத்தில் இருந்து இடைவிலகியவர்கள் பாதாள குழுக்களுடன் தொடர்புபட்டுள்ளனர் என்று தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. இது குறித்து முறையான விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

பாதாளக் குழுக்கள் மற்றும் போதைப்பொருள் வியாபாரம் ஆகியவற்றுக்கு அரசியல் தொடர்பு உள்ளது. ஐக்கிய தேசியக் கட்சி, ஐக்கிய மக்கள் சக்தி, சர்வஜன சக்தி உள்ளிட்ட அரசியல் கட்சிகளின் 34 பேர் இந்தப் போதைப்பொருள் வியாபாரம் மற்றும் அதனுடன்தொடர்புடையகுற்றச்செயல்களுடன் தொடர்புபட்டுள்ளனர் என்று புலனாய்வுத் தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளன. இவர்கள் நடந்து முடிந்த உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் போட்டியிட்டுள்ளார்கள்.

போதைப்பொருள் வியாபாரம் மற்றும் பாதாள குழுக்களைக் கட்டுப்படுத்துவதற்குக் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். புதியசட்டங்கள்வெகுவிரைவில்இயற்றப்படும் புதிய விசாரணை அலகுகள் அனைத்து மாவட்டங்களிலும் நிறுவப்படும். பாதாளக் குழுக்களின் செயற்பாடுகளினால் பொதுமக்களின் அன்றாட வாழ்க்கைக்குப் பாதிப்பு ஏற்படவில்லை என்றார்.

## வெசாக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அனுர குமார திசாநாயக்க தலைமையில் நுவரெலியா பௌத்த நிலைய விகாரையில் இன்று மாலை நடைபெறவுள்ளது.

வெசாக் வாரத்தில் 3 நாட்களுக்கு நாடு முழுவதிலும் ரீதியிலுள்ள இறைச்சி, மதுபான விற்பனை நிலையங்கள் மூடப்படவுள்ளன.

நுவரெலியாவில் நடைபெறும் தேசிய வெசாக் பண்டிகை மற்றும் அனுராதபுரத்திற்கு செல்லும் பக்தர்களுக்காக நேற்று முதல் விசேட தொடருந்துசேவை முன்னெடுக்கப்படவுள்ளதாக தொடருந்து திணைக்களம் தெரிவித்தது. மே 13 வரை இந்த விசேட தொடருந்து சேவை முன்னெடுக்கப்படவுள்ளது.

## ஆசிரியருக்கு ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

II, அத்தியாயம் XLVIII இன் பிரிவு 27:9 இன் படி கட்டாய விடுமுறையில் அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், இச்சம்பவம் தொடர்பான முதற்கட்ட விசாரணைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், அதன் அறிக்கை கிடைத்தவுடன் முறையான ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்ள தேவையான ஏற்பாடுகள் செய்யப்படும் எனவும் அமைச்சு தெரிவித்துள்ளது.

அத்துடன், இந்தச் சம்பவம் தொடர்பில் சில தரப்பினர் தமது பணி பொறுப்புகளை புறக்கணித்திருக்கின்றனரா என்பதை ஆராய்வதற்காக அமைச்சினால் உள்ளக விசாரணை ஒன்றும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

## அமைச்சர் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெற்றிபெற்றுள்ளதாக அமைச்சர் பிமல் ரத்நாயக்ககுறிப்பிட்டுள்ளகருத்துமுறையற்றது. நிராகரிக்கத்தக்கது. இந்தக் கருத்தை அவர் உடனடியாக வாபஸ் பெற வேண்டும் என இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழு தலைவர் சிறிதரன் வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற முன்னாள் ஜனாதிபதிகள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான சிறப்புரிமைகளை குறைத்தல் தொடர்பான தனிநபர் பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலில் இலங்கை தமிழழ் அரசுக் கட்சி கசிப்பு மற்றும் பணத்தை வழங்கியே வென்றுள்ளதாக அமைச்சர் பிமல் ரத்நாயக்க முறையற்ற வகையில் குறிப்பிட்டுள்ளார். அவரின் இந்தக் கருத்தை வன்மையாகக் கண்டிக்கின்றேன். அவர் அந்தக் கருத்தை மீளப் பெறவேண்டும்.

உண்மையான நியாயமான ஜனநாயகவாதியாக இருந்தால் அவர் அரசியல் ரீதியாக காழ்ப்புணர்ச்சியற்ற இனவாதமற்ற அரசியலை இந்த நாட்டில் செய்யவிரும்புகின்றார் என்றால், இனங்களை மதிக்கின்றார் என்றால் தன்னுடைய அந்தக் கருத்தை அவர் வாபஸ் பெறவேண்டும்.

1940 ஆம் ஆண்டில் தமிழரின் தேசியத் தந்தை செல்வநாயகத்தால் உருவாக்கப்பட்டு 27 வருடங்களாக கிடப்பில் இருந்த இலங்கை தமிழ் அரசுக் கட்சி 2004ஆம் ஆண்டில் தமிழர்களின் தேசியத் தலைவர் பிரபாகரனால் வெளியில் கொண்டுவரப்பட்டு தமிழரின் தேசிய அடையாளமாகத் தரப்பட்ட கட்சி. ஒரு காலமும் தமிழ் அரசுக் கட்சி எவருக்கும் மதுவைக் கொடுப்பதையோ, மதுவுக்கான அனுமதிகளை பெறுவதற்கோ அல்லது மதுசாலைகளை திறப்பதற்கோ சம்மதம் தெரிவித்த கட்சியல்ல, அதற்காக உடந்தையாக இருந்த கட்சியுமல்ல. அதேபோன்று நாங்கள் பணம் கொடுத்து வாக்குப் பெற்றவர்களும் அல்லர்.

ஒரு தேசிய இனத்தினுடைய அடையாளத்தை, அவர்களின் இருப்பை, அவர்கள் இந்த மண்ணிலே வாழ வேண்டியதற்கான வாழ்க்கை முறையை, இழந்த இறைமையை மீட்பதற்காகப் போராடுகின்றதனித்துவமானஇனத்தினுடைய விடுதலை இயக்கமே இலங்கை தமிழ் அரசுக் கட்சி. எனவே எங்களுடைய கட்சி சார்பாகப் பொறுப்புடன், எங்களுடைய கட்சி அவ்வாறாககசிப்போ, பணமோவழங்குகின்ற கட்சி அல்ல என்பதனை மீண்டும் பதிவு செய்கின்றேன் - என்றார்.


காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு

076 3983858

மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com





# துறைசார் மேற்பார்வைக் குழுவில் ஆதம்பாவா எம்.பிக்கு நியமனம்

(ஸாகிர்)

ஆறு துறைசார் மேற்பார்வைக் குழுக்களுக்குத் தெரிவுக் குழுவினால் பெயர் குறித்து நியமிக்கப்பட்டுள்ள உறுப்பினர்களின் பெயர்களை சபாநாயகர் ஜகத் விக்ரமரத்ன நாடாளுமன்றத்தில் அறிவித்தார்.

அதன்படி கல்வி, ஊழியப் படை மற்றும் மனித மூலதனம் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவுக்கு அம்பாறை மாவட்ட கரையோர பிரதேசங்களின் அபிவிருத்திக்குழுத் தலைவரும், இலங்கை அரசியல் பேரவை உறுப்பினருமான அபூபக்கர் ஆதம்பாவா எம்.பி. நியமிக்கப்பட்டுள்ளார்.

நாடாளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுவிற்கு 03 உறுப்பினர்களும் அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவிற்கு 03 உறுப்பினர்களும் புதிதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

அவ்வகையில், 6 துறைசார் மேற்பார்வைக் குழுக்களில் பணியாற்றுவதற்கு நியமிக்கப்பட்ட உறுப்பினர்களின் முழு விவரம் பின்வருமாறு:

பொருளாதார அபிவிருத்தி மற்றும் சர்வதேச உறவுகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவுக்கு லக்ஷ்மன் நிபுண ஆரச்சி, (திருமதி) சட்டத்தரணி சாகரிகா அதாவுத, (திருமதி) சட்டத்தரணி நிலந்தி கொட்டஹச்சி, கந்தசாமி பிரபு, விஜேசிரி பஸ்நாயக்க, திலிண சமரகோன், (செல்வி) சட்டத்தரணி லக்மாலி ஹேமசந்திர ஆகியோரும் -

உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் மூலோபாய அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவுக்கு மஞ்ஜுள சுரவீர ஆரச்சி, கே.இளங்குமரன், ரவீந்திர பண்டார, தனுஷ்க ரங்கனாத், அசித நிரோஷண எகொட வித்தான, ஷாந்த பத்ம குமார சுபசிங்ஹ, சட்டத்தரணி கீதா ஹேரத் ஆகியோரும் -

கல்வி, ஊழியப் படை மற்றும் மனித மூலதனம் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவுக்கு அபூபக்கர் ஆதம்பாவா, கிருஷ்ணன் கலைச்செல்வி, நிலூஷா லக்மாலி கமகே, சுகத் வசந்த த சில்வா, சுஜீவ திசாநாயக்க, சஞ்ஜீவ ரணசிங்க, சுனில் ராஜபக்ஷ ஆகியோரும் -

சுகாதாரம், வெகுசன ஊடகம் மற்றும் மகளிர் வலுவூட்டல் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவுக்கு முனீர் முலாபர், நிஹால் அபேசிங்க, சமன்மலீ குணசிங்க, (பேராசிரியர்) சேன நாணயக்கார, எஸ். ஸ்ரீபவானந்த ராஜா, ஜகத் மனுவர்ண, ருவன் மாபலகம ஆகியோரும் -

சுற்றாடல், கமத்தொழில் மற்றும் வளங்களின் நிலைத்தன்மை பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவுக்கு ரொஷான் அக்மீமன, உபுல் கித்சிறி, எம்.ஏ.சீ.எஸ். சத்துரி கங்கானி, சுசந்த குமார நவரத்ன, சுதத் பலகல்ல, கிட்ணன் செல்வராஜ், சட்டத்தரணி பாக்ய ஸ்ரீ ஹேரத் ஆகியோரும் -

விஞ்ஞானம், தொழில்நுட்பம் மற்றும் டிஜிற்றல் பரிணாமம் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவுக்கு சதுரங்க அபேசிங்க, அர்கம் இல்யாஸ், லசித் பாஷண கமகே, தனுர திசாநாயக, சட்டத்தரணி ஹசாரா லியனகே, ஜனக சேனாரத்ன, சந்திம ஹெட்டிஆரச்சி ஆகியோரும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

# ஒன்பது நாள்களில் வற்றாப்பளையில் கதிர்காம பாதயாத்திரைக் குழுவினர்

(சகாதேவராஜா)

யாழ்ப்பாணம் செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்திலிருந்து ஜெயாவேல்சாமி தலைமையில் ஆரம்பமான யாழ்– கதிர்காமம் பாதயாத்திரை ஒன்பது நாள்களில் வெள்ளிக்கிழமை காலை வரலாற்று பிரசித்தி பெற்ற முல்லைத்தீவு வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்தை வந்தடைந்தது.

இந்துக்களின் பாரம்பரிய கதிர்காமத்திற்கான பாதயாத்திரை வழமைபோல இம்முறையும் யாழ்ப்பாணம் செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்திலிருந்து ஜெயாவேல்சாமி தலைமையில் அரோஹரா கோசத்துடன் உணர்வு பூர்வமாக கடந்த முதலாம் திகதி வியாழக்கிழமை விசேட பூஜையுடன் ஆரம்பமானது.

26 ஆவது வருடமாக இவ் வருடம் காலநிலை மாறுபாடுகளுக்கு மத்தியில், வழமைக்கு மாறாக இம்முறை முதல் நாளில் நூற்று இருபதுக்கு அதிகமாக அடியார்கள் பங்கேற்றுள்ளனர்.

எனினும் இயக்கச்சி தொடக்கம் புதுக்குடியிருப்பு வரை நிலவிய மாறுபட்ட காலநிலை காரணமாக சுமார் 60 யாத்திரீகர்கள் காய்ச்சல் தடிமன் நோயால் பீடிக்கப்பட்டிருந்தனர்.

இருந்தும் பயணத்தை விடாமல் தொடர்ந்து முருகன் அருளால் வற்றாப்பளையை வந்தடைந்துள்ளோம்.

தற்போது யாருக்கும் உபாதை இல்லை. அனைவரும் சுகமாக உள்ளனர். மருத்துவ உதவி தற்போது தேவைப்படாது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன் என்று தலைவர் ஜெயாவேல்சாமி வற்றாப்பளையிலிருந்து தெரிவித்தார்.

இன்று காலை பாதயாத்திரை மீண்டும் ஆரம்பமாகும். மேலதிகமாக பக்தர்கள் இங்கு இணைந்து கொள்வார்கள்.



# ‘கண்ணீரால் கழுவப்படாத நினைவுகள்’ நூல் பொலிஸ் அத்தியட்சகருக்கு வழங்கி வைப்பு

(பாறுக் ஷிஹான்)

சிரேஷ்ட ஊடகவியலாளரும் புகைப்பட கலைஞருமான வசந்த சந்திரபாலவினால் எழுதி வெளியிட்ட 'கடுலின் நோசெதுனு மாதம' என்ற புத்தகம் அம்பாறை மாவட்ட சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகரிடம் வழங்கப்பட்டது.

கடந்த கால யுத்த நிலைமைகளை எதிர்கொண்ட குறித்த பத்திரிகையாளர் அவரது அனுபவங்களை குறித்த புத்தகத்தில் எழுதியுள்ளதுடன் அம்பாறை மாவட்டத்திற்கும் நாட்டிற்கும் அவர் செய்த சேவைக்காகவும் குறித்த புத்தக வெளியீட்டையும் சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் பாராட்டினார்.

இவர் அம்பாறை மாவட்டத்தை வதிவிடமாக கொண்டுள்ளதுடன் 30 வருட அனுபவமுள்ள உள்நாட்டு போரில் பல்வேறு சாட்சிகளை கொண்ட ஊடகவியலாளர் ஆவார்.அத்துடன் போர் கால செய்திகளின் ஊடாக தான் பெற்ற அனுபவங்களை எதிர்காலத் தலைமுறையினருக்குக்கடத்தும் நோக்கில் தமிழில் கண்ணீரால் கழுவப்படாத நினைவுகள் என்ற பொருள் படும் ('□□□□□□□ □□□□□□□□ □□□') என்ற தலைப்பில் இப்புத்தகம் தற்போது சந்தையில் விற்பனையாகின்றமை குறிப்பிடத்தக்கது.





கடந்த காலங்களில் வசந்த சந்திரபாலவினால் அம்பாறை நகர மண்டபத்தில்நடத்துப்பட்ட புகைப்படக் கண்காட்சி பலரது கவனத்தையும் ஈர்த்துள்ளது. கடின முயற்சியுடன் கூடிய அர்ப்பணிப்புடன் அழகிய முறையில் ஒவ்வொரு புகைப்படங்களையும் ஆவணமாக்கி வாசகர்களின் பாராட்டினை அவர் பெற்றிருக்கின்றார்.

சிரேஷ்ட ஊடகவியலாளர் வசந்த சந்திரப்பால கடந்த பல வருடங்களுக்கு மேலாக ஊடகத்துறையில்பலஅனுபவங்களுடன்சிறப்பாக செயற்படுவதுடன் அவர் சிறந்த தத்துரூபமான புகைப்பட கலைஞர் ஆவார்.இலங்கையில் பிரபலமான தொலைக்காட்சிகளான ஹிரு அத தெரண தொலைக்காட்சிகளில் பிராந்திய செய்தியாளராகவும் செயற்பட்டு வருவதுடன் தேசிய பத்திரிகைகள் வானொலி இணையங்களிலும் ஊடகவியலாளராக செயற்படுகின்றார்.

குறித்த கண்காட்சியில் இறைவனின் படைப்புகளில் உள்ள ஒவ்வொரு விநோதங்களையும் ஒரு வில்லை ஊடாக ஒவ்வொரு புகைப்படங்களும் அவரது ஆற்றலையும் புதிய யுக்திகளையும் கொண்டு உயிரோட்டமாக மிளிர்கின்றது.இயற்கையான காடுகளில் உள்ள மிருகங்கள் பறவைகள் அவற்றின் வாழ்விடங்கள் முதல் அவற்றின் ஒவ்வொரு அசைவுகளையும் ரசித்துஅழகாகபுகைப்படமாக்கி ஆவணப்படுத்தியுள்ளமை இக்கண்காட்சியின் சிறப்பம்சமாகும்.இதே வேளை பொழுது போக்கிற்காக பல்வேறு விலங்குகள் மற்றும் பறவைகளை வனவிலங்கு சரணாலயங்களுக்குச் சென்று தனிமனிதனாக நின்றும் இரவு நேரங்களில் கூட அழகிய முறையில்புகைப்படங்கள்எடுத்திருக்கின்றார். இக்கண்காட்சியில் பார்ப்பதற்கு அரிய பறவைகள் விலங்குகள் உள்ளிட்டவைகளை கூட அருமையாக பல்வேறு சந்தர்ப்பங்களில் புகைப்படமாக்கப் பட்டுள்ளதுடன் பார்வையாளர்களின் பாராட்டையும் பெற்றிருக்கின்றது.

இவ்வாறான பல அரிய புகைப்படங்களை சிறந்த அழகிய உள்ளுணர்வுடன் மிகுந்த கடின முயற்சியுடனும் அர்ப்பணிப்புடனும் ஆவணமாகி உள்ள சிறந்த தத்துரூபமான புகைப்பட கலைஞரும் ஊடகவியலாளருமான வஸந்த சந்திரபாலவின் கண்காட்சியை அம்பாறை பிரதேசநூற்றுக்கணக்கான பாடசாலை மாணவர்கள் உட்பட பல தரப்பினரும் பார்வையிட்டு பாராட்டி வருகின்றனர்.


உங்கள் கனவை நனவாக்க ...!

NVQ Level 3 & 4 Courses

புதிய பிரிவுகள் ஆரம்பம் 20.04.2025

கற்கும் போதே தொழில் ஆற்றக் கூடிய வாய்ப்பு



- CARE GIVER COURSE (பராமரிப்பாளர் பயிற்சி)
- NURSE ASSISTANT COURSE (தாதிய உதவியாளர் பயிற்சி)

கற்கைநெறி மொழி:ஆங்கிலம்/தமிழ்
இந்த கற்கைநெறி முடிவடைந்தவுடன் 3 மாதங்கள் பயிற்சி வழங்கப்படும்

தகுதி:
- வயது 16 அல்லது அதற்கு மேற்பட்டவர்கள்
- ஆங்கிலத்தில் அடிப்படை அறிவு
- GCE O/L இல் குறைந்தது 05 பாடங்களில் தேர்ச்சி

JDR HEALTH CARE (PVT) LTD
JDR PARAMEDICAL ACADEMY

46, Brodie Lane , Jaffna.
தொடர்பு:070 7070 722

# ஐஸ் போதைப் பொருளுடன் 21 வயது சந்தேகநபர் கைது

(தில்சாத் பர்வீஸ்)

தனது உடைமையில் மிகவும் சூட்சுமமான முறையில் மறைத்து வைத்து ஐஸ் போதைப் பொருளை வைத்திருந்த சந்தேக நபர் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர். அத்தோடு உடமையில் இருந்த ஐஸ் போதைப் பொருளையும் சம்மாந்துறை பொலிஸ் நிலைய பெருங்குற்றப் பிரிவினர் மீட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் வியாழக்கிழமை காலை வேளையில் நடைபெற்றுள்ளது.

அம்பாறை மாவட்டம், சம்மாந்துறை பொலிஸ்பிரிவுக்குஉட்பட்ட செட்டவட்டை பகுதியில் இக் கைது இடம்பெற்றுள்ளது.

சம்மாந்துறை பெருங்குற்ற பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனை நடவடிக்கையின் போது 21 வயதுடைய சந்தேக நபர் ஐஸ் போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு கைதான சந்தேக நபரிடமிருந்து 2 கிராம் 470 மில்லிகிராம் மீட்கப்பட்டது. சந்தேக நபர் சான்றுப் பொருள்களுடன் சட்ட நடவடிக்கைக்காக சம்மாந்துறை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

அத்துடன், இந்தச் சோதனை நடவடிக்கை யானது சம்மாந்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கே.டி.எஸ் ஜெயலதின் வழிகாட்டுதலில் பெருங்குற்றப்பிரிவு பொறுப்பதிகாரி கே.சதீஸ்கர் தலைமையிலான குழுவினர் இச் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# வாழைக்குலை விலை வீழ்ச்சி செய்கையாளர்கள் பாதிப்பு

கிளிநொச்சி மாவட்டத்தில் வாழைக்குலை விலையில் பாரிய வீழ்ச்சி காரணமாக செய்கையாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஒரு கிலோ கதலி வாழைக்காய் 15ரூபா தொடக்கம் 20ரூபாவுக்கு கொள்வனவு இடம்பெறுவதால் தமது உற்பத்தி செலவுக்கேற்ப விற்பனை செய்ய முடியாத நிலை காணப்படுவதாகவும் குருவிகளும் குரங்குகளுமே அவற்றை சாப்பிடுவதாகவும் தெரிவிக்கின்றனர்.

பாரிய நஷ்டத்தை எதிர்நோக்கியுள்ளதாக வாழைச்செய்கையாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

குறைந்த விலையில் கொண்டு சென்று சந்தையில் கொடுப்பதற்கு கொண்டு செல்வதற்கான செலவே விற்பனை செய்கின்ற வாழைக்குலையில் கிடைக்காத நிலையில் மரத்துடனே அப்படியே விட்டுள்ளதாக தெரிவிக்கின்றனர்.

வெளிமாவட்ட வியாபாரிகளும் கொள்வனவுக்கு வருவதில்லை எனத் தெரிவிக்கின்றனர். 316



# கிண்ணியா நகரசபையில்

## ஒரே குடும்பத்தை சேர்ந்த இருவர் ஒரே கட்சியில் தெரிவாகினர்

(ஹஸ்பர்)

நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி மன்ற தேர்தலில் ஒரே குடும்பத்தை சேர்ந்த இரு சகோதரர்கள் ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் போட்டியிட்டு வெற்றியீட்டியுள்ளார்கள்.

கிண்ணியா நகரசபைக்கான உள்ளூராட்சி மன்றத்தில் றஹ்மானியா வட்டாரத்தில் எம்.எம்.மஹ்தி மற்றும் மாஞ்சோலை வட்டாரத்தில் ரசாட் முஹம்மட் ஆகியோர்களுமே வெற்றி பெற்றுள்ளனர். குறித்த இருவரும் ஒரே குடும்பத்தை



சேர்ந்த சகோதரர்களாவர்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 10.05.2025இல் வெளியிடப்பெற்றது